தென்றல்

ஆசிரியர்:- கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | வெளிநாடு மூன்றணா |

மலர் 2 | சென்னை 20—12—55 செவ்வாய்க்கிழமை | இதழ் 27

★ அகத்தியன் என்பான் யார்? ★

புலவர் செந்நாப் பொருந்திய தமிழகத்தின் தமிழ் மக்களாலும், தமிழறிஞர்களாலும் தமிழ் முனியென்றும், தமிழ் வளர்த்த குறுமுனிவன் என்றும் அகத்தியர் சிறப்புப் பெற்றவர். அன்னாரைப் பொதிகைத் திருமுனிவன் என்றும் கூறினர் என்பதை "தென்றமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன்" என்ற கம்பர் வாக்கு உணர்த்தும். இத்துணைச் சிறப்பு வாய்ந்த அகத்தியர் யார்? இவர்தான் தமிழமொழியை உண்டாக்கினரா? அதனைப் போற்றி வளர்த்தவரும் இவர்தானா? இவைகளையெல்லாம் சிறிது ஆராய்தல் வேண்டும்.

அகத்தியர் தமிழ் நாட்டிற்கு வந்த விதம்

தமிழ்நாட்டில் அகத்தியர் வந்துதான் தமிழ்மொழி உண்டாகி வளர்ந்தது என்று சில அறிஞர்கள் என்ன எண்ணங்கொண்டு கூறிப் போந்தனரோ தெரியவில்லை. இவர்கள் கூற்றுப்படி அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வருவதற்குமுன் தமிழ்மொழி இல்லையென்று கூறுதல் இழுக்கான செய்தியாகும். நிறைந்த புலமையும், ஆராய்ச்சித் திறனும் கொண்ட அறிஞர்கள் இதனை ஒப்புக்கொண்டதே இல்லை. அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்னரேயே தமிழ் நாட்டில் தமிழ்மொழி வழக்கில் இருந்து வந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. சிதையாத சீரிளமைத் திறம் வாய்ந்த செந்தமிழ் மொழி ஆரியம்போல் உலக வழக்கு அழிந்தொழிந்த மொழியன்று.

பண்டொரு நாள் (திருமண காலமென்று அறிஞர் கொள்ளுவர்) இமய மலையின் கண் சிவபிரான் பக்கலில் பிரமனும், திருமாலும், இந்திரனும், பிறதேவர்களும், சனகாதி அருந்தவர் பிறரும் நெருங்கி இருந்த அமயம் இந்த ஞாலம் பொறுக்கலாற்றது வடகிழக்கெல்லைதாழ்ந்து, தென்மேற்கெல்லை உயர்ந்தது கண்டு, வானோர் சிவபிரானை வேண்டி நின்னையொப்பானொருவனை அத்தென்மேற்கெல்லையில் வாழும்படி விடுப்பின் இந்த நிலவுலகம் நேர்நிற்கும் என்று கூறிய காலை, குறுமுனிவனாகிய அகத்தியனே எம்மை ஒப்பான் என்று சிவபிரான் கூறி அக்குறுமுனிவனை அங்கு போகுமாறு பணிக்க அக்குறுமுனிவன்,

"விடைகொடு போவான் ஒன்றை
வேண்டினனேகுந் தேயம்
தொடைபெறு தமிழ்நா டென்று
சொல்லுப அந்த நாட்டின்
இடைப்பயில் மனித்த ரெல்லாம்
இன்றமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப கேட்டார்க்கு
உத்தரம் உரைத்தல் வேண்டும்."



என்று வணங்கிக் கேட்க, பின்னர் சிவபிரான் அச்செந்தமிழின் இலக்கணஇலக்கிய நூல்களை அம்முனிவன் தெளியுமாறு கூறி அனுப்பினார் என்று **பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம்**கூறுகிறது. இக்கருத்துக்களையே கந்தபுராண நூலுடையாரும், **"ஆதியிற் றமிழ் நூலகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகன்"** என வேறு புலவர்களும் கூறிப்போந்தனர்.

இப்புராணக் கருத்துமுக்கியமல்ல, தேவையுமல்ல! ஆனால், இதிலிருந்து அகத்தியர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்னரேயே கணக்கிலா நூல்களைத் தன்னகத்தே கொண்டு தமிழ்மொழி சிறப்புற்றிருந்தது என்பதை நன்கு உணர்தல்வேண்டும்.

அகத்தியரின் தமிழக வாழ்க்கை

அகத்தியர் முதல், இடை, கடையென்னும் தமிழ் முச்சங்கங்கள் இருந்த காலங்களிலெல்லாம் இருந்தார் என்று கூறப்படுகிறது. தலைச்சங்கம் ஐந்தாம் கடற் பெருக்கோடு முடிந்துவிட அதற்குச் சில காலத்திற்குப்பின் இடைச்சங்கம் தொடங்கி நடைபெற்றிருக்க வேண்டுமென்றும், தலைச்சங்கம் ஏறக்குறைய 4500-ஆண்டுகள் 89 அரசர்களின் தொடர்ந்த ஆட்சியில் நடைபெற்றிருந்ததென்றும் களவியலுரை உரைக்கின்றது.

முதற் சங்கத்தை நிறுவிய முதல் மன்னன் பெயர் காய்சின வழுதியென்றும், இறுதி மன்னன் பெயர் கடுங்கோன் என்றும் கூறப்பட்டுள்ளன. அக்காலத்து மன்னர்கள் நீடித்த ஆயுள் உடையராயிருந்தனரென்று கோடல் தவறுகாது. தலைச்சங்கத்து 549 புலவர்கள் இருந்தனர் என்றும், ஆனால் அவர்கள் யாவரும் ஒரே காலத்தவரன்று என்றும் தெரிகிறது.

"ஸ்காட் டெலியட்டு" என்பார், ஐந்தாவது கடல் வெள்ளம் ஏறக்குறைய 9500 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததாகும் என்று கூறியிருக்கிறார். இவைகளையெல்லாம் ஆராயும் போது 10,000 ஆண்டுகட்கு முன் 4000 - ஆண்டுகள் தலைச்சங்கம் இருந்தது என்று நன்கு விளங்குவதோடு, இக் காலத்தேதான் அகத்தியனாரும் தலைச்சங்கத்திலிருந்து தமிழாய்ந்து சிறந்து விளங்கினாரென்று களவியலுரை கூறுகின்றது.

பின், கடற் பெருவெள்ளம் நிகழ்ந்து கபாடபுரம் என்னுமிடத்தில் இடைச்சங்கம் ஏற்பட்டது. வெண்டேர்ச் செழியன் காலமுதல், இடைச்சங்கம் தென்மதுரையிலே தொடங்கியிருத்தல் கூடுமென்றும், அவ்விடைச் சங்கம்நிறுவிச்சில காலங் கழிந்த பின்பு மீண்டும் கடல் வெள்ளம் ஏற்படவே, சங்கம் நிறுவிய மன்னருள் ஒருவனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியனென்போன் தன் குடிகளைப் பிழைப்பித்த பின் மீட்டுங் கபாடபுரமென்னுமிடத்தில் அச்சங்கத்தைத் தொடர்ச்சி பெற நடத்தினனென்றும் தெரிகிறது.

இவ்விடைச் சங்கம் இருந்த காலத்திலும் அகத்தியனார் தமிழாய்ந்து இருந்தார் என்றும், அவருக்கு தொல்காப்பியர் போன்ற இயற்றமிழ் மாணவர்கள் பன்னிருவர் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது. இப்பொழுதுள்ள நூல்களுள் முதலாவதாகிய பேரிலக்கணத்தைத் தம் பெயரால் தொல்காப்பியர் இயற்றினார் என்றும், தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரங் கூறினவர் பனம்பாரனார் என்றும், அதங்கோட்டாசான் என்பவர் தொல்காப்பியத்தைக் குற்றமற்றதெனக் கண்டு நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து அதனை ஏற்றுக்கொண்டவராவர் என்றும் தெரிகிறது. அவிநயனார், காக்கை பாடினியார் போன்ற வேறு பல புலவர்களும் வாழ்ந்திருந்து பல நூல்கள் இயற்றினர் என்பதாகவும் தெரிகிறது.

நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து தொல்காப்பியத்தை ஏற்றுக்கொண்டதாக நிகழ்ந்திருத்தலால், தொல்காப்பியம் இடைச்சங்க நூலாகவே கருதப்படவேண்டும். ஆகவே, ஏறக்குறைய கி. மு. 2000 ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் இடைச்சங்கம் தோன்றி நெடுங் காலம் இருந்ததென்பதும், இக் காலத்திலேயே அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் வாழ்ந்திருக்க வேண்டுமென்பதும் நன்கு விளங்குகிறது.

பின், கடற் பெருவெள்ளம் நிகழ்ந்து, தற்பொழுதுள்ள மதுரையென்னுமிடத்தில் கடைச்சங்கத்தை முதல் திருமாறன் என்பவன் நிறுவினான். கடைச்சங்க காலம் கி. மு. 1600 முதல் கி. பி. 750 வரை உள்ள கால எல்லைக்குட்பட்டது என்று இறையனார் களவியலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடைச்சங்க காலத்திலும் பல புலவர்கள் வாழ்ந்தார்கள். தற்காலத்து நாம் பயிலும் பத்துப்பாட்டு, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, நற்றிணை போன்ற தொகை நூல்களையும்; திருக்குறள், நாலடியார் போன்ற கீழ்க்கணக்கு நூல்களையும் இன்னும் பல நூல்களையும் இயற்றினார்கள். பின் கி. பி. 225-ல் ஆட்சி செய்த உக்கிரப் பெருவழுதி காலத்துடன் கடைச்சங்கம் முடிகிறது. கடைச்சங்கத்தார் காலத்துச் சிறந்து விளங்கிய பெரும்புலவர் நக்கீரனார். இக்காலத்திலும் அகத்தியனார் வாழ்ந்திருந்

- 8-ம் பக்கம் பார்க்க -

தமிழ் படித்து வளர்ந்தானா? தமிழை வளர்த்தானா?

சிலம்பு வழங்கும் செல்வம்

சாக்கையர் கூத்து, தமிழகத்தின் மிகப் பழமையான துன்பியல் நாடகம் அல்லது வீறியல் நாடகம். அது சாந்திக்கூத்து அல்லது அகக்கூத்தின் ஒருவகை. இதற்கெதிரான மற்றொரு வகை விநோதக்கூத்து. இது புறக்கூத்தின் ஒரு வகை. இதுவே மலையாள நாட்டின் ஓட்டந்துள்ளலாய் வளர்ந்திருக்கவேண்டும். இவ்விரண்டின் பலவகைத் திரிபுகளாகவே தென்னாட்டு இயக்ககானம், குறவஞ்சி, பள்ளு முதலியவையும் இடைக்கால இக்கால தெருக்கூத்துக்களும் வளர்ச்சி அல்லது தளர்ச்சியடைந்தன. இதன் பிற கிளை வகைகளாகவே மலையாள நாட்டு ஊமைக்கூத்து, தெலுங்கு நாட்டுப் பொம்மலாட்டம் ஆகியவை எழுந்தன.

இவற்றின் மிகப் பழமையான ஒரு கிளை கிழக்கே இலங்கை, பர்மா, மலாயா, தென்கிழக்காசியத் தீவுகள், சீனம், ஆகியவற்றில் பரவிற்று. மற்றொரு கிளை மிகப் பழமையான காலத்திலேயே, வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டே ஆசியா, ஐரோப்பா எங்கும் பரவி, ஆங்கில நாடகத் தோற்றத்திற்கும் மூல விதையாய் இருந்தது. மூல நாடகம் சாக்கையர் கூத்து, விநோதக் கூத்து இரண்டுபடாத கால மரபு இது.

கிரேக்க நாடகம் ஒருபுறமும், சமஸ்கிருத நாடகம் ஒருபுறமும் சாக்கையர் கூத்தின் மற்ற இரண்டு கிளைகளாக வளர்ந்தன. மலையாள நாட்டிலும் கிரேக்க நாட்டிலும் சாக்கையர் கூத்து மரபும் ஓட்டந்துள்ளல் மரபும் தனித்தனி மரபின. ஏனெனில் சமயச் சார்பாகக் கோயிலினுள் ஆடப்படும் அகக்கூத்து, ஊர் வெளியில் ஆடப்படும் புறக்கூத்து என்ற இரு வடிவங்களும் இங்கே பேணப்பட்டன. ஆனால், நம்பூதிரிகள் மணிப்பிரவாள வாய்ப்புக்காக, சாக்கையர் கூத்துக்குள்ளேயே விநோதக் கூத்தையும் விகடன் அல்லது விதூஷகன் அல்லது கோமாளி மூலமாகப் புகுத்தினர். சமஸ்கிருத நாடகம் இந்தக் கலவை வகையின் வளர்ச்சியாகும்.

உலகெல்லாம் நாடக மரபைப் பலவாறு இயக்கிய தமிழகக்கூத்து, சங்க காலத்திற்குப்பின் தமிழகத்தில் இலக்கியப்புலவர் ஆதரவற்று, தெருக்கூத்து, குறவஞ்சி முதலியனவாக இழிந்தன. ஆனால், மலையாள நாட்டில் அது தொடுத்து 12-ம் நூற்றாண்டு வரை கண்ணகி நாடகமாகவே ஆடப்பட்டது. ஆனால், அந்நூற்றாண்டுமுதல் நாடகத்தின் கதை காலத்துக்கேற்ப மாறுபடத் தொடங்கிற்று. இம்மாறுபாட்டுக்கு இராமாயணக் கதை பொதுவாகவும், கம்பராமாயணம் சிறப்பாகவும் அமைந்துவந்த செல்வாக்கே காரணம் என்னலாம். சில காலம் கம்பராமாயண நாடகம் மலையாள நாடெங்கும் சாக்கையர் கூத்துடன் போட்டியிட்டது.

சிலப்பதிகார காலத்திலும் சங்க காலத்திலும் தமிழில் இயல் இலக்கியம் நால்வகைப் பாக்களால் இயன்றன. இசை இலக்கியமே விருத்த முதலிய பாவினங்களில் இயன்றன. சிலப்பதிகாரத்தில் இரண்டும் இடம் பெறுகின்றன. ஆனால், நாளடைவில் இசைப்பாட்டுக்களிலேயே மக்கள் ஈடுபாடு மிகுதியாயிற்று. இசைப் பாட்டுக்கள் விரவிய சிலப்பதிகாரத்தைவிட இசைப்பாட்டாகப் பாடப்பட்ட கம்பராமாயணம் மிகுதி செல்வாக்கடைந்தது. ஆனால், கம்பராமாயணத்திலும் நாடக அரங்குக்கு இடையிடையே உரைநடை சேர்க்கப்பட்டன. பாக்களைவிட உரைநடை மக்களுக்கு எளிதாக இருந்ததால், இதுவும் கம்பராமாயண நாடகத்தின் செல்வாக்கை வளர்த்தது.

கம்பராமாயண நாடகம் சாக்கயர் கூத்துப்போல நடிக்கப்பட்டதே தவிர, முழுதும் சாக்கியர் கூத்தாய் இல்லை. சாக்கியர் கூத்து இன்றும் பயில்வதற்குக் கடுமையானது. கம்பராமாயண நாடகமோ புது வளர்ச்சியானதால் கடுமை குறைந்ததாயிருந்தது.

கம்பராமாயண நாடகத்துடன் போட்டியிடுவதற்காக சாக்கியர் கூத்தும் கதை மாற்றி கண்ணன் கதை ஆக்கப்பட்டது. இது, கண்ணகி கூத்து என்ற பழம் பெயர் மாறி, கண்ணனாட்டமாயிற்று. 16-17ம் நூற்றாண்டுகளில் மலையாள நாட்டின் சிற்றரசர்களுள் சமய, கலைத் துறைகளில் தலைமை தாங்கியவன் கோழிக்கோட்டு சாமுதிரி ஆவான். கண்ணனாட்டத்தை மலையாள நாட்டின் தேசீய நாடகமாக அவன் வளர்த்து வந்தான். அவன்வருத்திப் பயிற்றுவித்த நாடகக் குழுவே மலையாள நாடெங்கும் விழாவிலும் மற்றச் சமயங்களிலும் நாடகமாடிற்று.



18-ம் நூற்றாண்டில் சாமுதிரிப் பாட்டுக்குப் போட்டியாக அரசியலில் வளர்ந்த சிற்றரசன் கோட்டயத்தரசன். ஒரு விழாவின்போது அவன் கண்ணனாட்டம் நடத்த விரும்பினான். அரசியல் எதிரியாயினும் கலைத்துறைத் தலைவனான சாமுதிரியிடம் வேண்டுகோள் விடுத்தான். கலைத் தலைமையின் பாகத்தைவிட அரசியல் போட்டியுணர்ச்சியையே சாமுதிரி மிகுதி காட்டினான். குழுவை அனுப்ப மறுத்துவிட்டான். இதனால் மனத்தாங்கலுற்ற கோட்டயம் அரசன் கண்ணனாட்டக் குழுவுக்குப் போட்டியாகப் புதிதாக இராமனாட்டமொன்றும் இராமனாட்டக் குழுவொன்றும் அமைத்தான். இதன் புகழ் நாளடைவில் கண்ணனாட்டத்தின்புகழை மங்கவைத்தது.

சமஸ்கிருத நாடகத்தில் அமைந்த விகடங்களுக்கு இராமனாட்டம் இடம் தந்தது. இராவணன், கும்பகர்ணன் ஆகியவர்களுக்குத் துணை நடிகர் அமைந்து, தனி ஆடையணி மணியுடன் நகைச்சுவைக்கு இடமளித்தனர். மக்களிடையே இதன் வளர்ச்சி இராம நாடகம்போல இராவண நாடகம் என்ற முறையில் வளர்ந்தது. ஆயினும் கோயில், அரசியல் ஆதரவு பெற்ற இராமனாட்டம் இன்றுவரை தொடர்ந்து வளர்ச்சியடைந்துள்ளது.

சாக்கையர் கூத்தின் மரபில்லாத இராமனாட்டத்தில் ஒருபகுதியாகவே கதைகளி வளர்ந்துள்ளது. அதன் தனி வளர்ச்சி அணிமைக் காலத்தது. சென்னை அரசியலில் மலையாள அரசியல் உரிமை பெற்றுள்ள வள்ளத்தோள் என்ற கவிஞர் இதைத் தற்காலத்துக்குரியதாக வளர்ப்பதில் ஈடுபட்டு அதன் புகழை நாடெங்கும் பரப்பியுள்ளார்.

கதைகளி வளர்ச்சியின் வரலாற்றைப் பற்றித் திருவாங்கூர் அரசியலார் வெளியிட்டுள்ள ஒரு சிற்றேடு, சிலப்பதிகார காலமுதல் இன்றுவரை உள்ள அதன் வளர்ச்சியையும் அதன் கலை, கலைத்தொழில் ஆகியவற்றையும் விவரிக்கிறது. அதில் பயன்படுத்தப்படும் இசைக் கருவிகளை அது வகுத்து நூற்றுக்கு மேற்பட்டவை இன்றும் வழக்கிலிருப்பதாகக் குறிக்கிறது. தமிழில் சங்ககால வழக்கிலிருந்த பல கருவிகளின் பெயர்கள் அதில் காணப்படுகின்றன.

பண்டைக் கேரளத்தில் இரு நூற்றுக்கு மேற்பட்ட கருவிகள் இருந்ததாக அச்சிற்றேடு குறிக்கிறது. அவற்றின் பட்டியல் ஒன்றும் தருகிறது. இப்பெயர்கள் **பண்டைக் கேரளத்தின் மலையாள இலக்கியமாகிய சிலப்பதிகாரத்திலுள்ளது என்று அந்நூல் குறிக்கிறது !**

தமிழ் இலக்கியத்தில் எம். ஏ. போன்ற உயர்ந்த பட்டங்கள் பெறுபவர்கள் சிலப்பதிகாரத்தைப் பழந்தமிழ் இலக்கியமாகப் பயில்வதுபோலவே, மலையாள இலக்கியத்தில் உயர்பட்டங்கள் பெறுபவர்களும் அதனைப் பழய மலையாள இலக்கியமாக இன்றும் பயில்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் சிலப்பதிகாரம் ஒரு சாக்கியர் கூத்து என்பது மறக்கப் பட்டதற்கும் அது இராமாயண நாடகமாக மாறியது ஒரு காரணம். ஆனால், தெருக்கூத்தின்வளர்ச்சியே அருமுயற்சி வேண்டிவந்த பழங்கலை அழிவதற்குக் காரணம் என்னலாம். ஆயினும் ஒரு சின்னஞ்சிறு குழுவினுள்ளாவது சிலப்பதிகாரம் பேணப்பட்டே வந்திருந்தது என்பதில் ஐயமில்லை. சமணசமயச் சார்புள்ள சிந்தாமணி போன்ற காவியங்களுடன் சேர்த்து அது பண்டைய ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகச் சமணரால் பேணப்பட்டு வந்தது: 12 - முதல் 16-ம் நூற்றாண்டு வரை இருந்து வந்த உரையாசிரியர்கள் அனைவரும் அதை மேற்கோளாகவோ, இலக்கண மரபுகளுக்கு எடுத்துக் காட்டாகவோ சுட்டியுள்ளனர்.

கண்ணகி வணக்கமும் சிலப்பதிகாரக் கதையும் தமிழகத்திலும் தமிழகத்துக்கு வெளியேயும் பாரத இராமாயணம் பரவியபின் கூட முற்றிலும் அழியாமல் இன்றளவும் தொடர்ந்து செல்வாக்குப் பெற்றே வந்துள்ளது. வில்லுப்பாட்டாகவும் அம்மானையாகவும் தெருக்கூத்தாகவும் தமிழகத்தில் அது வழங்காத காலம் இல்லை என்னலாம். அம்மானை நூல்கள் அச்சிலேகூட வெளிவந்து சிலநாள் உலவியதாக அறிகிறோம். கன்னட நாட்டுக்கப்பால் கோவாவில் உலவிய மக்கட் கதைகளில் 'சந்திராவின் பதி' என்ற பெயருடன் மிகத் திரிபுற்ற உருவில் 1868-ல் வெளியிடப்பட்டுள்ளதாக உயர்திரு எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

கண்ணகி கோயில் மலையாள நாட்டிலுள்ள கொடுங்கோளூரில் பகவதி கோயிலாக இன்று நிலை பெறுகிறது. பகவதியம்மன் இன்னும் ஒற்றை முலைச்சி என்று குறிக்கப்படுவதாகவும், வாழ்விழந்ததற்கறிகுறியாக இன்றும் அங்கே மஞ்சள், குங்குமம் வழங்கப்படுவதில்லை என்றும் சிலப்பதிகாரத்தை மலையாளத்தில் மொழிபெயர்த்த பெண்பாற்புலவர் அம்மாளு அம்மா குறித்துள்ளார்.

இலங்கையில் 11-ம் நூற்றாண்டுக்குரிய கண்ணகியின் மரச்சிலையும், வெண்கலச் சிலையும் பழம்பொருள் ஆராய்ச்சியாளரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

பத்தினிக் கடவுள் வணக்கம் தென்னாடு கடந்து கீழை உலகெங்கும் காணப்படுகிறது. எங்கும் பத்தினித் தெய்வம் கண்ணகியாகவே இருக்கவேண்டும் என்றில்லை. தமிழகத்திலேயே ஏழு நங்கையர் பத்தினிகளாக வழங்கப்பட்டதைச் சிலப்பதிகாரமே குறித்துள்ளது. ஆனால், கண்ணகி முன்னைய பத்தினித் தெய்வங்களுக்கில்லாத தனிச் சிறப்புக்களுடன் உலகில் புதுத்தெய்வம் அல்லது வம்பப் பெருந் தெய்வமாக உலவினாள் என்பதற்கு ஐயமில்லை. புத்தர் அறநெறியை உலகில் பரப்பிய அசோகன் போலவும், கிரிஸ்தவ நெறி பரப்பிய பேரரசன் கான்ஸ்டன்டைன் போலவும், தமிழகப் பேரரசன் சேரன் செங்குட்டுவன் கண்ணகி வழிபாட்டை அவன் கால நாகரிக உலகெங்கும் பரப்பினான்.

தமிழகத்தில் பழைய வில்லுப் பாட்டைப் புதுப்பிக்க நாம் ஓர் என். எஸ். கேயைப் பெற்றிருக்கிறோம். கேரளத்தில் கதைகளியைப் புதுப்பிக்க ஒரு வள்ளத்தோள் நாராயண மேனனைப் பெற்றிருக்கிறோம். பரதநாட்டியத்தை உலகில் பரப்ப உதயசங்கர் போன்ற வடநாட்டவராவது முயன்று வந்துள்ளனர். இவற்றையெல்லாம் தாண்டிய உலகின் பழம் பெருங்கலையும் கலைசார்ந்த உலகப் பேரிலக்கியமுமான சிலப்பதிகாரம் சாக்கியர் கூத்தைப் புதுப்பித்தது. அதை மக்கள்மேடை ஏற்றத் தமிழகமோ, மலையாள நாடோ அல்லது தமிழ் மலையாள மொழிகளின் பழங்கலைச் சிறப்பிலும் வருங்கால வளத்திலும் அக்கறையுடைய வெளிநாட்டாரோ இனித்தான் முன்வர வேண்டும்.

— தொடரும் —

விற்பனையாளர்களுக்கு

◉

எம்மிடம் அரும் பெரும் தலைவர்கள், அன்பான உழவர் குடும்பங்கள், அழகிய சினிமா நட்சத்திரங்கள் கொண்ட பொங்கல் வாழ்த்துகள் பல வண்ணங்களில் விலை 6 பை முதல் 0-2-6 அணா வரையில் 25 சதவிகிதம் கழிவுடன் கிடைக்கும். மாதிரிக்கு 12 அணா தபால் தலை அனுப்புக.

பகுத்தறிவுப் பண்ணை
115 வண்டிக்காரத் தெரு,
தஞ்சை.

> ‘போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !”

எண்ணம்

மலர் 2 | 20-12-55 | இதழ் 27

காலதேவன் கருணையாலே !

“எப்படியோ ஒன்று சேர்ந்துவிட்டோம். இனி ஏன் பிரித்துக் கொண்டிருக்க வேண்டும்? ஆனவரை சரி—அதிகப் படியாக எதுவும் செய்து கொள்ள வேண்டாம்”—என்று போகிற போக்கிலே சொல்லி விட்டுப் போகும் பொல்லாப்புக்கஞ்சிகள்தான் இன்றைய தேசிய இயக்கத்திலே மலிந்து காணப் படுகிருர்கள், நில நூல் சொல்லும் நியதி எது? நிர்வாகம் திறம்பட நடப்பதற்கு வழிவகை என்ன என்பது குறித்து அதிலுள்ள படித்தவர்கள் கூட சிந்தித்துப் பார்ப்பதில்லை, எதிர்த்துக் கேட்டால் எம்பெருமான் நேரு என்ன நினைத்துக் கொள்வாரோ? டில்லிக்குப் போனுல் பாராமுகமாய் இருந்து விடுவாரோ? என்று குலை நடுங்கும் ‘குல்லாய்’களும் தேசிய இயக்கத்தில் இல்லாமலில்லை, மற்ற மாநிலங்களைவிட ‘அடக்க ஒடுக்க’ நாடகத்தில் தமிழ் நாடுதான் அடிக்கடி நேருவிடம் சபாஸ் பட்டம் பெற்று வருகிறது. டில்லிக்கு அருகாமையிலே உள்ள மாநிலங்களில் புரட்சி, கிளர்ச்சி, மறியல், என்றெல்லாம் தேசியத்தாரின் மேல் பார்வையிலேயே அடிக்கடி நடைபெறுவதும் தமிழ் நாட்டிலே திராவிட இயக்கம் நீங்கலாக மற்ற எந்தக் கட்சியும் உருப்படியான எந்தப் போராட்டமும் நடத்தாமலிருப்பதும் இதற்குப் போதிய சான்ருகும். தென்ஞட்டுப் பிரிவினையைப் பொருத்த மட்டில், நேருப் பண்டிதரின் பாலுள்ள பற்றின் காரணமாகத்தான் அதுபற்றி தென்ஞட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் பேசாதிருக்கிருர்கள் என்று சொல்லிவிட முடியாது; சிலர் அப்படி யிருக்கலாம்; ஆனுல் ஆளும் பொறுப்பையும் அதிகாரங்களையும் பண்டிதரிடம் கொடுத்துவிட்டோமே, நமது சக்தியை வைத்து அன்னவர் அகில உலகப் புகழ் பெற்று விட்டாரே, இப்போது நமது பேச்சு எடுபடுமா என்று தயங்குகிறவர்களும் தென்ஞட்டுக் காங்கிரஸ் கட்சியில் இல்லை யென்று சொல்லிவிட முடியாது. அந்தப் பட்டியலிலே இப்போது கல்வியமைச்சர் சுப்ரமணியம் சேர்ந்திருக்கிருர். காலதேவன் கருணையாலே கல்வியமைச்சர் எப்படியோ இழுத்து வரப்பட்டிருக்கிருர். டிசம்பர் 11-ல் சென்னையில் நடைபெற்ற பதிற்றுப்பத்து மாநாட்டில் அமைச்சர் சுப்ரமணியம் ஆற்றியுள்ள சொற்பொழிவு அவருடைய நெஞ்சின் அலைகளை நமக்குத் தெளிவாக்கியிருக்கிறது. பரங்கியரை எதிர்க்க, காங்கிரசார், படை சேர்த்த போராட்டக் காலத்தில் “வெள்ளைக்காரனை விரட்டியடித்ததும் நாம் செய்யப் போகும் முதற் சாதனை மொழிவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பதுதான்” என்று முகஸ்துதி பாடியதையும், ஆனுல் அதே காங்கிரஸார் இரண்டாண்டுகளுக்கு முன் மொழிவழி மாநிலப் பிரிவினையில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் தலை யிடக்கூடாது; எந்தவிதப் பங்கும் பெறக் கூடாது என்று கட்டளையிட்டதையும், காங்கிரஸ் கட்சியின் அரசியல் நாடகங்களைத் தொடர்ந்து கவனித்துக்கொண்டு வருகிறவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் — மறக்க முயன்ருலும் அது சாத்தியமாகக் கூடியதுமல்ல. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் அன்றைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு ‘தங்கள் சித்தம்—என் பாக்கியம்’ என்று இருந்தவர்தான் இன்றைய நமது கல்வியமைச்சரும். அவரேதான் இன்று மொழிவழி மாநிலப் பிரிவினையை கைதட்டி ஆரவாரம் செய்யும் அளவுக்குத் துணிவு பெற்றிருக்கிருர். ஞாயிறன்று பதிற்றுப்பத்து மாநாட்டைத் துவக்கி வைத்து அவர் பேசுகையில்,

“மொழிவழி மாநிலப் பிரிவினை நடந்துவரும் காலம். அது நல்லதா கெட்டதா? பலவித அபிப்பிராய பேதங்கள். ஆனுல் இத்துறையில் முன்னேக்கியே செல்ல வேண்டும் என்பது என் கருத்து. காலத்தின் போக்கை அனுசரித்துப் பிரச்சினையை நோக்கின் மொழிவழி மாநிலப் பிரிவினை நல்ல தென்றே தோன்றுகிறது.”

— என்று குறிப்பிட்டிருக்கிருர். அன்ருெரு நாள் கட்டுப்படுத்திய அ. இ கா. கமிட்டியின் அடக்குமுறையை எதிர்க்கு மளவிற்கு இப்போதுதான் சுப்ரமணியனுர் மனம் வளம் பெற்றிருக்கிருர். காலத்தின் செயல்தான்—ஞாலத்தின் ஓட்டம்தான்! மறுப்பதற்கில்லை !

அமைச்சர் சுப்ரமணியம் மொழிவழி மாநிலப் பிரிவினையை ஆதரித்துப் பேசியதோடு மட்டுமல்லாமல் நமது பிரிவினைக் கருத்தைக்கூடஒட்டிப் பேசியிருக்கிருர். “பண்டைத் தமிழ் நாட்டின் மூவேந்தர்களுள் ஒருவராண்ட பகுதி இன்று நம்மிடையே யிருந்து பிரிய நிற்கிறது. இது குடும்பப் பிரிவினை போல. குடும்பம் நன்ருக நடக்க சில சமயம் அவசியம் நேரும் போது பிரிவினை ஏற்படுகிறது. ஆனுல் அது காரணமாக உறவு பாதிக்கப் படுவதில்லை, வலுப்படுவது சகஜம். காலா காலத்திலேயே பிரிவினை ஏற்பட்டால் மற்ற உறவுகள் கெடாதிருக்கும். நிர்வாகம் திறமையாக சௌகரியமாக நடக்கப் பிரிவினை அவசியமாயிருக்கிறது. அதன் மூலம் தமிழர், தெலுங்கர், மலையாளிகள், கன்னடியர் ஆகிய நாம் அனைவரும் மேலும் நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும்”—இதுவும் கல்வியமைச்சரின் வாய் மொழிதான். தமிழின் மிடுக்கு. அலங்காரம் இல்லையே தவிர, நமது கருத்தை காங்கிரஸ்காரர்கள் பாணியில் அப்படியே பேசியிருக்கிருர். திராவிட நாடு பிரிவினை முழக்கத்தின் முதல் வெற்றிக்கு அறிகுறிதான் ‘மொழிவழி மாநிலப் பிரிவினை என்று தி. மு. கழகம் பன்முறை வலியுறுத்தி வந்திருக்கிறது. இதைப் புரிந்துகொள்ளச் சக்தியற்றவர்கள்தான் மொழிவழி மாநிலப் பிரிவினை ‘திராவிட நாடு பிரிவினைக்கு வேட்டு’ என்று கத்தி வந்தார்கள்—வருகிருர்கள். நான்கு மொழி வழியரசுகளின் கூட்டாட்சிதான் திராவிட நாடு என்பது; விரும்புவோர்தான் அந்தக் கூட்டாட்சியில் இணைந்திருக்க முடியும், கட்டாயமில்லை. ஆனுல் எந்தக் காரணத்தைக் கொண்டும் திராவிட மொழி வழியரசுகள் டில்லியோடு தொடர்பு கொண்டிருக்கக்கூடாது. நேசமுண்டு பாசமுண்டு ஆனுல் நமது உழைப்பிலே பங்கு டில்லிக்குக்கிடையாது. இந்த ஜீவலட்சியத்தின் பெரும் பகுதியை சுப்ரமணியம் ஒப்புக்கொள்கிற அளவுக்கு வந்திருக்கிருர். பத்தாண்டுகளுக்கு முன்பு தலைவர் அறிஞர் அண்ணு சொன்ன அதே உதாரணத்தையே சுப்ரமணியனுரும் குடும்பப் பிரிவினை என்று சுட்டிக் காட்டியிருக்கிருர். தமிழர், தெலுங்கர், கேரளத்தார், கன்னடியர் ஆகிய நால்வரும் ஒரே இனத்தின் செல்வங்கள் என்பதையும் ஒப்புக் கொண்டிருக்கிருர். ஆனுல் ஒன்றை மட்டும் சொல்லாது விட்டிருக்கிருர். ஏற்றிருக்கும் பொறுப்போ, ஞாயிறன்று வீற்றிருந்த பதவியோ அதைச் சொல்ல விட்டிருக்காது என்று நாம் நினைக்கிருேம். ஒரே இனத்தின் செல்வங்களுக்குள்ளேயே பிரிவினை இருந்தால்தான் குடும்பம் பலம் பெறும், நிர்வாகம் திறம்பட அமையும் என்று சொல்லியிருக்கும் அமைச்சர், ‘இந்தியா’ என்ற மாயச் சொல்லின் பேரால் பல இனத்தவர் ஒரே அரசியல் சட்டத்திற்குக் கட்டுப்பட்டிருப்பது பற்றி ஏன்தான் மௌனமாக இருந்தாரோ தெரியவில்லை; ஒரே இனத்திற்குள் பிரிவினை ஏற்பட்டாலே குழப்பம் இராது, மாருக வலுப்பெறும் என நம்புகின்ற அமைச்சர் ஆரிய ஆதிக்கத்தின் பிடியிலிருந்து திராவிட இனம் பிரிந்து, ஆனுல் உறவோடு வாழ முடியும் என்பதை ஏன் சொல்ல மறுக்கிருர்? அவ்வாறு பிரிந்தால் ஒற்றுமை கெட்டுப் போகும் என்று சொல்ல மாட்டார். துவக்கத்திலே நாம் சொன்னது போல பண்டிதரின் பொல்லாப்புக்காக பதிற்றுப் பத்து மாநாட்டிலே அந்தக் கருத்தை விழுங்கிவிட்டிருப்பார்.

நேற்று மாநிலப் பிரிவினை பற்றி ஊமை வேடம் போட்டார்.

இன்று “தேவை, தேவை! மாநிலப் பிரிவினை தேவை! ஒற்றுமையை வளர்க்கப் பிரிவினைதான் வேண்டும்” என்கிருர்.

இன்று, உள்ளொளியை-திராவிட நாடு பிரிவினை ஒலியை ஒளிக்கிருர். நாளை “டில்லித் தொடர்பை ஒழித்தால்தான் நாடு வளம் பெறும்” என்பார். கால தேவன் கருணை வைத்தால் போதும் ‘கல்வியமைச்சர்’கள் நிச்சயம் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று சொல்லத் தவற மாட்டார்கள்!

◉ ◉◉

தேசீய மயம்!

மருந்தையும் வைத்தியத்தையும் தேசீய மயமாக்கிய (அதாவது சர்க்காரே மேற்கொண்ட) ஏற்பாட்டை ஆதரித்து, பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தொழிற் கட்சி அங்கத்தினர் ஒருவர் பேசினுர். பேச்சின் இடையிலே, “இன்று பிரிட்டனில், வேறெப்போதையும் விட மிக அதிகமான குழந்தைகள் பிறந்திருக்கின்றன. காரணம் என்ன?” என்று கர்ஜித்துச் சற்று நின்ருர்.

அவரே இதற்குப் பதில் சொல்வதற்கு முன்பு, ஒரு டோரி, “தனி நபர் முயற்சி” என்று கோஷித்தார்.

— ஹெரால்டு ஹெல்ஃபர், ‘காரொனெட்’

◉ ◉◉ ◉

வெண்பாப் போட்டி 22

★

அண்ணுவுக்கும் ஏதேனும் ஒரு பொருளுக்கும் சிலேடை அமையும்படி வெண்பா எழுதவும்.

முடிவு தேதி 31-12-55.

முகவரி:— வெண்பாப் போட்டி,
தென்றல்,
சென்னை-6

சாவும் வாழ்வும்

தென்னரசு

"பெருமழையில் கண்மாய்கள் உடைப்பெடுத்து புதர்களிலிருந்த நாகப்பாம்புகள் ஊருக்குள் நுழைய ஆரம்பித்தன."

"வீடு இடிந்து விழப்போகிறதே என்று ஒண்டுவதற்குக் கோயிலுக்குள் ஓடினார்கள்; ஆனால் கோயிலும் இடிந்து விழுந்து அவர்கள் இறந்து போனார்கள்."

"புயலின் பேய்க்கதறலைக் கேட்டு தொட்டில் குழந்தை கதறியது. தாய் எழுந்து தொட்டிலருகில் போகும் போது வீட்டு உத்திரம் விழுந்து அவள் மண்டை சிதறியது."

"பிணங்கள் மண்மூடிக்கிடந்தன. சில கிராமங்களில் ஆட்களே காணப் படவில்லை. இன்னும் சில கிராமங்கள் இருந்த இடமே தெரியவில்லை. இன்னும் சில ஊர்களில் அரைப்படி அரிசி விலை ஒரு ரூபாய்."

"மாதாகோயில்களும் இடிந்தன, மகமதிய மசூதிகளும் தவிடுபொடியாயின! இந்துக்கோயில்கள் அத்தனையுமே தூள்! தூள்!! உண்டியல் பெட்டிகள், உருத்திராட்ச மாலைகள், ஒளிவீசும் 'வெல்வெட்' விபூதிப் பைகள் எல்லாமே நீரில் மூழ்கிப் போயின."

—புயலும் மழையும் தென்னாட்டை இவ்வாறு கண்ணீர்க்குளமாக்கிப் போய்விட்டன. மாற்றுப் படையினரை மண்கவ்வச் செய்த மறவர் நாட்டை ஆற்றுப்பெருக்கும், அகலவாய்க் கடல்நீரும் பிணக்காடாக்கிவிட்டன. ரத்தபாசத்தால் சித்தக்கடின முள்ளோரும் உதவி செய்ய முன்வந்து விட்டார்கள். பரம்பரை பரம்பரையாக பாசம் பிடித்துப் போய் இரும்புப்பெட்டிக்குள் கட்டிக்கிடந்த வெள்ளிக்காசுகள் துயர் துடைக்க முன்வந்திருக்கின்றன. எதிர்பார்க்க முடியாத இடங்கள் - எச்சல் கையால்கூட காகமோட்டாத கருமிகள்-எங்கெல்லாமோ இருந்து நிதித்தொகை வந்துகொண்டிருக்கிறது, நீரில் மூழ்கியோரைக் காப்பாற்றிட.

இயற்கையின் அழிவுசக்திப் பிரயோகம் பற்றி தனக்குத்தானே நிந்தித்துக்கொள்ளாதார் இல்லை.

'சோதனை சோதனை, தீராத சோதனையா தமிழ்நாட்டுக்கு?"—சிவநேசச் சீமான்கள்கூடச் சொல்லிச் சொல்லி வருந்தினார்கள்.

கோரப்புயல் கொதிக்காத உள்ளங்களைக் கொதிக்க வைத்து விட்டது. கேரல்டா உள்ளங்கள் கூடகீற்றுக் கீற்றாயின ஆனாலும் ஓரே ஒரு உருவம் கவலைகொள்ளவில்லை. தென்னாட்டின் அடிப்பாகம் செத்துக்கொண்டிருக்கிறது-வாழ்விலொருகால் சாவிலொருகால் என்று தமிழ்மக்கள் அல்லாற்பட்டு ஆற்றொணாத்துயரத்தில் ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்த 'இழவு விழுந்த வீடுகளைப் பற்றி' அவர் கவலை கொள்ளவில்லை.

அவ்வளவு 'இரக்கச்சித்த'முள்ள அந்த விந்தை மனிதர் யார்? நாடே ரத்தக்கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும்போது விந்தியத்தின் தென்திசையில் அப்படியொரு 'நீரோ' வேஷக்காரர் வாழ்கிறாரா?

மயானமாகக் கிடக்கும் தென்புலத்தில், மூலைக்கு மூலை ஒலித்துக்கொண்டிருக்கும் மரணகீதம் அவர் காதுகளிலே நுழையவில்லை என்பது மட்டுமல்ல; அந்த மனிதர் எந்த ஆண்டவனை, ஈகையுள்ளவர், இரக்கமுள்ளவர், மன்னிக்கும் சுபாவமுள்ளவர் என்றெல்லாம் தன் ஆயுள்காலம் முழுதும் போற்றி புகழ்ந்து, எழுத்தாராதனை செய்து வந்தாரோ அந்த ஆண்டவனையே அந்த மனிதர் அரக்கன் என்று சொல்ல முன் வந்திருக்கிறார். அழிவு சக்திகளெல்லாம்கூட ஆண்டவன் திருவிளையாடல் என்று சொல்லியிருக்கிறார். அந்தப் பரந்த நோக்கம் கொண்ட பழுத்த மேனி யார்.

வெள்ளம் புகுந்தது ஆண்டவன் செயலாம்! வீடுகளைப் பலிகொண்ட கோரப்புயல் ஆண்டவனால் ஏவி விடப்பட்டதாம்!

நேத்திரம் கெட்ட முதுகிழவிகள் அன்னை தந்தைமாரின் ஆசைக்குப் பாத்திரமான மழலைகள், அத்தனை பேரையும் அழித்து 'ஆனந்த' நடனமாடிய அடைமழையும், விடாப் புயலும் மகேஸ்வரனின் திருக் கட்டளையாம்!

—இந்த நாட்டுமக்களையெல்லாம் சுரணையற்றவர் என்று எண்ணிக்கொண்டு அவ்வளவு தைரியமாகச் சொல்லியிருக்கிறார், ஊன்றுகோல் பிடித்து நடக்கும் காலம் வந்துகூட ஊராளும் பேராசையை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டிருக்கும் ஆச்சாரியார்.

நாடே கதறிக்கொண்டிருக்கிறது; நாட்டின் முதல்வர் காமராஜர் துடித்துப் புலம்புகிறார்; இந்த நேரத்தில் 'மாஜி முதல்வர்' என்ன செய்யவேண்டும்? பக்கம் நின்று கைகொடுக்காவிட்டாலும் துக்க மூட்டும் நச்சுப் பேச்சுக்களையாவது கக்காமலிருக்கலாமல்லவா! 'இந்த நாச சக்தியெல்லாம் நாதன்கருணையிலேதான்' என்றால் கேட்போர் நெஞ்சும் நெருப்புக் கிடங்காகி, அந்தத் தீப்பொறியிலே எதிரிகளின் கருவிழிகள் அவிந்துபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே! எவ்வளவு நெஞ்சழுத்தம்? தன்னுடைய குடையின் கீழே இருந்த மக்கள்பால் எத்துணை அன்பு?

ஆண்டவன் செயல்-அதை மனிதர்களால் தடுக்கமுடியாதாம்!

யார் அந்த ஆண்டவன்? அல்லும் பகலும் சொல்லுக்குச்சொல் ஆச்சாரியாரால் புகழ்பாடப் பெற்று வந்த அதே ஆண்டவன்தானா இந்த ஆண்டவனும்? நான் செய்த தொண்டுகளிலே, மகாபாரதம், இராமாயணம் - இவைகள் பற்றி ஆராய்ச்சி நடத்தியதுதான் தலையாய தொண்டு என்று சொன்னார்.

[ஆச்சாரியாரின் அரசியல் வாழ்விலே விரல்விடக்கூடிய எந்தச் சாதனையையும் செய்துமுடித்ததில்லை. சட்ட மன்றத்திற்கு அவர் கொண்டுவந்த தீர்மானங்கள் அத்தனையும் தோற்றுத்தான் போயிருக்கின்றன. அதனால்தான் புதிய கல்வித்திட்டத்தைசட்டசபையையே கலக்காமல் கொண்டுவந்தார். அதுவும் மூன்றே மாதத்தில் அழிந்து பட்டது. "ஒருவேளை இராமாயணம், மகாபாரதம், முதலியவைகளை நான் எழுதலாமா" என்று சட்டசபையைக் கேட்டிருந்தால் நிச்சயமாக அதுகூடத் தோல்வியடைந்திருக்கும். அதனாலேதான் இராமாயண ஆராய்ச்சியும், பாரதமும் தனது தலையாய தொண்டு என்கிறார். இந்த மர்மக்கதைகளைச் சொல்ல வேண்டுமே என்பதற்காகத்தான் தனது வாழ்க்கைச் சரிதத்தை எழுத முடியாதென முன்பொரு முறை தெரிவித்தார். அவ்வாறு எழுத ஆரம்பித்தால் தான் ஏதும் உருப்படியான காரியம் செய்யாததையும், அதே நேரத்தில் அவரது ஆட்சியிலே அவராலே பல கொலைகள் நிகழ்ந்ததையும் சொல்லித்தானே ஆக வேண்டும்.]

அதில் வரும் ஆண்டவர்கள்தானா தென்மாவட்டங்களை அழித்தவர்களும்? அப்பேர்ப்பட்ட தீக்குணம்

கொண்ட 'தீனதயாளர்'கள் கதையை எழுதியதைத்தானா ஆச்சாரியார் தனது தலையாய தொண்டு என்கிறார்? அவ்வளவு கெட்டியாகத் துருப்பிடித்துப்போன உள்ளம் பெற்ற ஆண்டவர்களுக்கு தாசனாக இருந்துகொண்டு ஆச்சாரியார் அரசியலில் புகுந்திருந்தார் என்றால், உண்மையிலே நாட்டின் பால்-நாட்டுமக்களின்பால் அக்கரை கொண்டு சுதந்தர தாகத்தால் உந்தப்பட்டுத்தான் களத்திலே குதித்திருப்பார் என்று எங்ஙனம் கூறமுடியும்?

தான் பிரதமராக இருந்த காலத்தில் வீசிய புயலின்போது ஒரு சாதாரண அறிக்கை விடுத்துவிட்டு ஆண்டவன் ஆராய்ச்சிகளிலே திளைத்திருந்தவர்தானே அவர்!

சட்டமறுப்பு இயக்கத்தின்போது அல்லாடியை மட்டும் ரகசியமாக ஒதுங்கி இருக்கும்படி சொல்லி வைத்த இனக்காவலராயிற்றே ஆச்சாரியார்? அவரை எப்படித் தொண்டாற்றும் தூயவர் என்று சொல்லமுடியும்? பட்டம் பெற்ற துறையிலே வெற்றிபெற முடியாத எத்தனைபேர் அரசியலிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும் புகுந்திருக்கிறார்கள்? அவர்களின் பட்டியலிலே ஆச்சாரியாரைத் துணிந்து ஒதுக்குவதிலே என்ன தவறு இருக்க முடியும்?

தெய்வச்செயல்! அந்தத் தெய்வச்செயல் ஆச்சாரியார் கண் முன்னேயே அழிந்தொழியட்டும்! திரண்டெழுந்த பெருவெள்ளம் திராவிடர் மக்கள் வெள்ளமாகி தாயகத்தை அரித்துத் தின்னும் 'ஆச்சாரியச'த்தை அடித்துக் கொண்டுபோகட்டும். அந்தநாள்...?

★ ★★ ★

எழுத்துக் கவிஞர்கள்

4

என்னருமை தெரியாதா?

எங்கே தமிழ்மன்னர்? எங்கேயெம் எழுத்தாளர்?
எங்கேயேன் நீயூதாய்! சல்லரியேன் தட்டாயோ!

வண்ணப்பட் டாடைநீ வந்தென்னைப் போராயோ!
எண்ணாத பொற்கிளிநீ என்கைக்கு ளாகாயோ!

வாசமலர் மாலைநீ வந்துகழுத் தேறாயோ!
ஓசை பெருக்கியென்னை யுலகெங்குஞ் சொல்லாயோ!

மூவேழு வேட்டு முழங்கும்பீ ரங்கியெங்கே?
மாவேழு பூட்டும் மணித்தேரு மெங்கேயோ?

சச்சைச்சா யிங்கு தமிழருமை தெரியாதா?
சிச்சிச்சி யிந்தச் செகத்தீரே பாரீரோ!

என்னையா விடியமுனம் ஏறிவிட்ட தோதலைக்குக்
கொன்னை தட்ட வேண்டாம் கூறுமையா சங்கதியைச்

சொல்லட்டா சொன்னால் துடிதுடிக்க மாட்டாயா?
இல்லையப்பா சொல்லுன் இருதயத்தைத் தடவுகின்றேன்.

வந்துவந்து நான் நான் நான் வார்த்தையிலே சொல்லட்டா?
மந்திரமோ இந்திரமோ வாயடைத்து விட்டதுவா?

என்பாட்டில் நேற்றே யிருந்த விடத்தினிலே
வெண்பாவா யொன்றை விளித்தெழுதி விட்டேனையா!

நேருக்கு நேர்போனை நின்றிறங்கு மேயெதுகை
ஆருக்குத் தானென் அருமை தெரியுமையா!

குத்தித் தலையிற் குறைதீர்த்த சாத்தனுமே
செத்துவிட்டான் நாங்கள் செய்ததவப் பாக்கியமே

இன்றிருந்தால் மூன்று கணத்திற்கு மேலிருக்கத்
தென்புலவர்க்கெழுமோ செப்பிடுவீர் செகத்தீரே!

—காப்பியாற்றுங் காப்பியனார்

★ ★★ ★

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

10

ஒரு வேதனைக்கு மனம்விளக்கம் தேடிக் கொண்டது. ஆனால் அதைத் தொடர்ந்து புதிய வேதனை வளர்ந்து விட்டது. இப்போதே செத்துத்தொலைந்து விட்டால்தான் என்ன என்கிற அளவுக்கு சுந்தரத்தின் எண்ணம் போய் நின்றது. இந்திரா மரணப் படுக்கையில்! பரிதாபத்திற்குரிய இந்திரா! பெறமுடியாததைப் பெற்று விட்டோம்; பெற்ற செல்வம் கைநழுவாது எனத் திடமாக நம்பிய இளமனதுக்காரி. தன் வாழ்நாளில் யாருக்கும் ஒரு போதும் ஒரு தீங்கும் செய்தறியாத உத்தமி. சத்தம் போட்டுப் பேசியறியர்த தங்கம். புழுவாய்த் துடிப்பது என்று பேச்சுக்குச் சொல்வார்கள்; உண்மையில் இந்திராவை நினைத்து நினைத்து சுந்தரம் அவ்வளவு துடித்தான். தங்கையின் மீது கொண்ட பற்றும் பாசமும் அவனை விவரிக்க முடியாத வேதனையிலாழ்த்தின. அந்த நேரத்திலும் அவனது பாச உள்ளம் இந்திராவின்மீது விநோதமான ஒரு கோபம் கொண்டது. "புரியாதவள்! கணவன் கைது செய்யப்பட்டால் என்ன? எப்படியும் ஒரு நாள் விடுதலை பெறத்தானே போகிறான்! அதற்குள் ஏன், என்னென்னவோ செய்துகொண்டு மரணப் படுக்கையில் கிடக்கிறாள்"—என்று தன்னையறியாமலே வாய்விட்டுப் பேசினான். தனியறை அதை எதிரொலித்தது. "இந்திரா! இந்திரா"!—என்று இடைவிடாமல் கதறினான். ஏனென்று கேட்பாரில்லை. கதவு தட்டும் சப்தம் கேட்டது. கண்களைத் துடைத்துக் கொண்டு போய் கதவைத் திறந்தான். ஹோட்டல் பையன் ஒரு கோப்பையைக் கொண்டு வந்து உள்ளே வைத்து விட்டு வெளியேறினான். மீண்டும் கதவைத் தாளிட்டான் சுந்தரம். எதிரே இருந்த காபிக் கோப்பை அவன் சிந்தனையை வளர்த்தது. இந்திரா அங்கே நிற்பது போலவும், காபிக் கோப்பையைக் கையிலெடுப்பது போலவும், அதில் விஷத்தைப் போடுவது போலவும், குடிக்கப் போவது போலவும் அவனது எண்ணம்தொடர்ந்தது. "படார்" என்று காபிக் கோப்பையைத் தட்டினான். இந்திராவைக் காப்பாற்றி விட்டது போல ஒரு மகிழ்ச்சி. விரக்தி கலந்த சிரிப்பு! மார்பு விம்மி விம்மித் தாழ்ந்தது. வாய்வழியே மூச்சு விட்டான். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவன்போல் முகத்தைத் துடைத்தபடி கதவைப் பூட்டிக் கொண்டு ஹோட்டல் மானேஜரிடம் வந்து சாவியைக் கொடுத்து விட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டையும் நீட்டினான்.

"புறப்பட்டு விட்டீர்களா சார்?"—என்று பரிவோடு கேட்டார் ஹோட்டல்காரர். ஆகா, ஹோட்டல்காரர்கள்தான் வருகிறவர்களிடம் எவ்வளவு பரிவு காட்டுகிறார்கள்! உலகத்திலேயே தலைசிறந்த நடிகர்கள் ஹோட்டல் நிர்வாகிகள்தான். சுந்தரம் தலையசைத்து விட்டு பாக்கி சில்லரைகளை வாங்கிக் கொண்டு வேகமாகப் புகை வண்டி நிலையத்தை நோக்கி நடந்தான்.

7

திசைமாறு படலம்

"எப்படி வாழ்வேன் இனிமேல்
இப்புவியின் மீது ஏழையும்
நானந்தோ!"

—'வேலைக்காரி' பாட்டு

சுந்தரத்தை விட்டுப் பிரிக்கப்பட்ட அம்பிகா, துன்பவெள்ளத்தில் ஆழ்ந்தாள். சுந்தரம் தன்னைத் தேடி வருவானா? தான் சொன்ன விலாசத்தை நினைவில் வைத்திருப்பானா?—என்று எண்ணி எண்ணிக்குழம்பினாள். இரவு முழுக்கக் கண்விழித்துக் காத்திருந்தாள். எப்படியும் சந்தித்து விடுவோமென்று மனத்தைத் தேற்றிக் கொண்டாள். பொழுது விடிந்தது. ஒரு நாள் முழுக்க உண்ணுமல் கிடந்த அம்பிகாவை உபவாசத்திலிருந்து மீட்பதற்காக அவள் தாய் உள்ளே நுழைந்தாள். "சாப்பிட வாடி" என்று அழைத்தாள். தாய்க்கும் மகளுக்கும் வாக்குவாதம் வளர்ந்தது. சற்றும் எதிர்பாராத விதமாக அம்பிகா அவளை ஓங்கி அறைந்து விட்டாள்.

"சண்டாளி! நீ கெட்டது போதாதென்று என்னையும் கெடுத்துத்தான்தீருவேனென்று நிற்கிறாயே! நீ ஏன் செத்துத் தொலையக்கூடாது?" என்று ஆத்திரம் தீரப் பேசிவிட்டு விழுந்து அழுதாள். ரெங்கலெட்சுமி அவளை முறைத்துப் பார்த்துவிட்டு வெளியேறினாள். வெகுநேரமாகியும் சுந்தரம் வரவில்லை. ஒருவேளை பாலனை மீட்பதற்காகச் சுந்தரம் முயன்று கொண்டிருக்கலாம் என்ற நினைவில் ஆறுதல் பெற முயற்சித்தாள். எதற்கும் பாலனைக் கேட்டால் விபரம் தெரிந்துவிடும் என்று கருதிக்கொண்டு ஆடைகளைச் சரிப்படுத்தியபடி புறப்பட்டாள்.

"எங்கடி போறாய்? நில்லு!"—என்று அதிகாரமாய்த் தடுத்தது ரெங்கலெட்சுமியின் குரல்.

"நீ பேசாதே! பேசினால் இந்த இடத்திலேயே உன்னைக் கொன்றுவிட்டு நானும் தற்கொலை செய்துகொள்வேன்" என்று தீர்மானம் தொனிக்கக் கூறிய அம்பிகா, பதிலை எதிர்பாராமலே வெளியேறினாள். இந்த மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வாய்களில் கொலையும் தற்கொலையும் தான் எவ்வளவு சீக்கிரம் வந்து விடுகின்றன தெரியுமா? கையிலே நச்சுக்கோப்பையை ஏந்தும்போதல்லவா தெரியும், மனித மனத்தின் பலவீனம்!

தியாகராயநகர் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்த அம்பிகா, நேரே இன்ஸ்பெக்டரிடம் போய் "பாலன் எங்கே" என்று கேட்டாள். இன்ஸ்பெக்டர்களுக்குள்ள இயற்கையான குணத்தின்படி தலைநிமிர்ந்து பார்க்காமலேயே, "காலையிலேயே ஜெயிலே கொண்டுபோய்ச் சேர்த்தாச்சு" என்று கூறிவிட்டு அப்பால் நடந்தார் அவர்! நீதிபதிகளும் நிர்வாக இலாகாவினரும் உத்தியோக முறைப்படி சாதாரணமாகக் கூறிவிடுகிற பல வார்த்தைகள், அதைக் கேட்டுத் தீரவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறவர்களுக்கு எண்ணெய் ஊற்றி நெருப்பு வைத்தது போலிருக்கின்றன. "குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை" என்று கூறிவிடுகிற நீதிபதி, மத்தியான உணவுக்கு வீட்டுக்கு வந்து மனைவி மக்களோடு சிரித்துக் கொண்டிருக்கிறார். அந்த வார்த்தையால் கட்டுப்படுத்தப்படுகிற கைதி, மனைவி மக்களை எண்ணித் துடித்துக்கொண்டே சிறைக்குள் நுழைகிறான்.

பாலனைச் சிறைக்குக் கொண்டு போய் விட்டதாக இன்ஸ்பெக்டர் சொன்ன வார்த்தையால் துடித்துப்போன அம்பிகா, நேரே சிறையை நோக்கிப் புறப்பட்டாள் கையிலே காலணாக்கூடக் காசு இல்லை—கடன் கொடுப்பாரும் யாருமில்லை. ஒரு பெண் கடன் கேட்கப் போனால் இந்த நாட்டில் கடனா கொடுப்பார்கள்? "கட்டிலுக்கு வா; கொட்டமடிக்கலாம்! காசு தருகிறேன்; கொண்டுபோகலாம்!" என்று கூறுவார்கள். தியாகராயநகரிலிருந்து அம்பிகா நடந்தே போனாள், சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு. அங்கேதான் இருக்கிறது சிறைச்சாலை. கால்கள் வலித்தன. பசி எடுத்து அடங்கிப் போனதாலே ஏற்பட்ட வரட்சி கலந்த மயக்கம் அவளைப் பைத்தியக்காரி போல் ஆக்கி வைத்திருந்தது. ஆனாலும் அம்பிகா சளைக்கவில்லை. ஓய்வுக்காகக் கொஞ்ச நேரம் கூட ஒரு இடத்தில் உட்காரவில்லை. பாலனைப் பார்க்கவேண்டும் என்கின்ற நினைப்பு, களைத்துப்போன அவள் நெஞ்சத்தை உறுதிபெற வைத்திருந்தது. நேரே சிறைச்சாலைக்கு வந்து சேர்ந்தாள். சிறைச்சாலையை ஏற இறங்க ஒரு முறை பார்த்தாள். பெரிய பெரிய தலைவர்களெல்லாம் இங்கிருந்திருக்கிறார்கள் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டாள். பக்கத்திலிருந்த சிறிய கூடாரத்திற்குள் போய் உட்கார்ந்தாள். அங்கே பல கைதிகளின் உறவினர்களும் வந்திருந்தார்கள். எழுதப் படிக்கத் தெரியாத தற்குறிகள் இந்த நாட்டில் ஏராளமாக

இருக்கிறார்கள் என்பதற்காக, ஒவ்வொன்றையும் எழுதிக் கொடுத்துக் காசு வாங்குவதற்கென்றே சிலபேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அங்கேயே நின்றபடி பேட்டி மனுவுக்கு எட்டணா என்று பேரம் பேசிக்கொண்டிருந்தார். அம்பிகாவிடம் காசு இல்லை. ஆனால் அவள் படித்தவள். ஒரு காகிதத்தை எடுத்து மனு எழுதிச் சிறை வாசலிலிருந்த பெட்டிக்குள் போட்டுவிட்டு மீண்டும் வந்து அமர்ந்தாள். கொஞ்சம் சாய்ந்து படுக்கலாமா என்று எண்ணினாள். அரசாங்க நிர்வாகத்திற்குட்பட்ட இடங்களில் அவ்வளவு சுலபமாகவா படுத்துவிட முடியும்! தூசு, துண்டு பீடி, வெற்றிலை எச்சில், கண்ணாடித் துண்டுகள், காகிதக் குப்பை—சுருக்கமாகச் சொன்னால் சென்னை அரசாங்க நிதி இலாகாவின் சொத்துக்கள் அத்தனையும் அங்கேதானே கிடக்கும்! கிடந்தது, அம்பிகா உட்கார்ந்திருந்த இடத்தில்! மெதுவாக முந்தானையால் கொஞ்சம் இடத்தைத் துடைத்துவிட்டுப் படுத்துக் கொண்டாள். அப்போதுதான், அங்கு உட்கார்ந்திருந்தவர்களில் இளம்பெண்ணாக இருந்த ஒருத்தியைக் கூர்ந்து கவனித்தாள். உடனே அவளது இளகிய மனது பரிதாப உணர்ச்சிக்கு ஆட்பட்டது. அந்தப் பெண் அழுதழுது கண்கள் சிவந்து வீங்கியிருந்தன. முந்தானைத் தலைப்பால் வாயை மூடியபடி மேலும் அழுதுகொண்டிருந்தாள். அம்பிகா அவளைப் பார்த்து, "யாரம்மா நீ?"—என்றாள். பதில் சொல்ல முடியாமல் அந்தப் பெண் மேலும் அழுதாள். உடனே பக்கத்திலிருந்த ஒரு நடுத்தர வயதுத் தாய், சுருக்கமாக அவளது கதையைச் சொன்னாள்: அந்தப் பெண் வில்லிவாக்கத்தைச் சேர்ந்தவளாம். அவளும் அவள் கணவனும் ஒரு மில்லில் வேலை செய்து கொண்டிருந்தார்களாம். அந்த மில்லில் கொஞ்சம் உயர்ந்த வேலை பார்த்துக்கொண்டிருந்த ஒருவன், ஒரு நாள் தனியாக இருந்த அவளைக் கெடுத்துவிட்டானாம். அதனால் ஆத்திரம் கொண்ட அவள் கணவன் அவனைக் குத்திக் கொன்றுவிட்டானாம். அந்தக் கொலைக் குற்றத்திற்காக அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்துவிட்டார்களாம். அந்தச் சிறையில்தான் அவன் வைக்கப்பட்டிருக்கிறானாம்.—இந்தக் கதையைக் கேட்ட அம்பிகாவின் கண்கள் கலங்கின.

மனைவியைக் கெடுத்தவனைக் கணவன் கொன்றான்; கொலை செய்தது குற்றமா இல்லையா என்பதைப் பற்றி மட்டுமே சட்டம் ஆராய்ச்சி நடத்தியது. கொலைக்குக் காரணமாய் இருந்தது, தண்டனையில் கொஞ்சம் கருணை காட்டத்தான் பயன்பட்டது. கற்பழித்தது நிருபிக்கப்பட்டால் கொலை குற்றமாகாது என்று ஏன் சட்டத்தை மாற்றக்கூடாது?—அம்பிகா இவ்வாறு எண்ணினாள். ஆனால் அவள் சட்டமந்திரியல்லவே!

"இனி என்னம்மா பண்ணப் போறே?" — என்று அந்தப் பெண்ணைப் பார்த்து அம்பிகா கேட்டாள்.

என்ன செய்வதென்று புரியாததால்தானே கண்ணீரே வருகிறது! அவசரத்தில் அவளுக்கு அந்த யோசனை தோன்றவில்லை. எதிர்காலத் திட்டம் என்ன என்பது அந்தப் பெண்ணுக்கே தெரியாது. ஏன், அவளிருந்த நிலையில் நாளைக்கு என்ன நடக்கும் என்பது கூடத் தெரியாது. பொதுவாக இந்த சமுதாயத்தில் ஒரு விதி உண்டு. பலாத்காரமாகக் கெடுக்கப்பட்டவள்கூட தட்டுக்கெட்டவள்தான். அதற்கு மேல் அவள் வாழ்க்கை அதே படகில் பயணம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் கணவனுக்காகக் கண்ணீர் விடும் அந்தப் பெண் நிச்சயமாக அதை விரும்பமாட்டாள். வேறு வழி?—சரி நமக்கென்ன என்று சிந்தனையை மூடிக்கொண்டாள் அம்பிகா.

"முனியாயி யாரம்மா?"—என்று ஒரு குரல் கேட்டது. அவசர அவசரமாக எழுந்தாள் அந்த இளம் பெண். கூடவே இன்னொரு நடுத்தர வயதுத் தாயும் எழுந்தாள். என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க அம்பிகாவும் அவர்கள் பின்னாடிச் சென்றாள். அந்தப் பெண்ணுக்குப் பேட்டி கிடைத்து விட்டது. கணவன் அவளைப் பார்க்கக் காத்துக் கொண்டிருந்தான், சன்னலுக்கு அந்தப்புறம். இந்தப் பக்கம் போய் நின்ற அந்தப் பெண் முட்டி மோதிக்கொண்டு அழுதாள். ஒருவரை ஒருவர் தொட முடியாது. நெருங்கிய சன்னல் கம்பிகள். வருகிறவர்கள் கைதிகளுக்கு நஞ்சு கொடுத்துவிடுவார்கள் என்பதற்காகவே அவ்வளவு பத்திரமாகப் பாதுகாக்கிறார்களாம். கைதி சிறைக்குள் துடிக்கலாமே தவிர சாகக்கூடாது என்பது அரசாங்கச் சட்டத்தின் ஒரு விதி. எவ்வளவு கருணை, பணம் கொடுத்தவனை ஆளுகிற சட்டத்திற்த!

அம்பிகா உண்மையில் அழுதுவிட்டாள். கம்பிகளுக்குப் பின்னால் நின்ற அந்தக் கைதியின் உருவம் அவளுக்கு அரைகுறையாகத் தெரிந்தது. விக்கலுக்கும் விம்மலுக்கும் பிறகு அந்தக் கைதி தன் மனைவியைப் பார்த்து, "முனியாயி, நான் இனி உயிரோடு வர்ரது நிச்சயமில்லே. உலகத்திலே வேறே என்ன இருக்கு? நீ வேறே கல்யாணம் பண்ணிக்க"—என்றான்.

உலகத்தில் தத்துவஞானிகளென்று தனியாக யாருமில்லை. அளவு மீறிய துன்பத்திற்குப் பிறகு பிரதி ஒரு மனிதனும் தத்துவஞானியாகி விடுகிறான். "நீயவருந்திலை; நீங்குவன் யானென்ற தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்பினா"ளாமே சீதை, அதுபோல அந்த வார்த்தைகளைக் கேட்டுத் தேம்பினாள் முனியாயி. சில சமயங்களில் ஆறுதல் வார்த்தைதான் அதிகத் துன்பத்திற்குக் காரணமாயிருக்கிறது. அம்பிகா சிலையாக நின்று அந்த சோக நாடகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

கைதி கணவனையிற்றே என்று கவலைப்படாமல் மனைவியிடமிருந்து பிரித்து இழுத்துக் கொண்டு போனார், கல்யாணமான ஒரு அதிகாரி. அவர் கவலைப்படமாட்டார். காரணம், அலுவல் முடிந்ததும் அவர் தன் மனைவியைச் சந்திக்கப் போகிறார். ஆனால் அந்தக் கைதி?

"அய்யா, ஒரு அஞ்சு நிமிஷம்! இன்னம் ஒரு அஞ்சு நிமிஷம்! உங்களைக் கும்புடுறேன். இனி சமீபத்திலே பாக்கமுடியாது. நீங்க நல்லா இருக்கணும். ஐயா! ஐயா!!" என்று கெஞ்சினான், கதறினான் அந்தக் கைதி; பயனில்லை. துடிக்கத் துடிக்க உள்ளே தள்ளப்பட்டான். முனியாயி "ஓ" வென்று அலறியபடியே புறப்பட்டாள். அம்பிகா பாவம்! தனக்குக் கொஞ்சங்கூட உறவில்லாத அந்தப் பெண்ணுக்காக விம்மி அழ ஆரம்பித்தாள். பெண்கள் அதிகம் நீதிபதிகளாக நியமிக்கப்படாமலிருப்பதற்குக் காரணம் இதுதான்: வழக்கில் நியாயம் வழங்குவதற்குப் பதிலாகக் கண்ணீருக்குக் கருணை வழங்கிவிடுவார்கள்! அம்பிகா நீதிபதியுமல்ல. ஆகவே கண்ணீரையே கருணையாக வழங்கிவிட்டுச் சோர்ந்து உட்கார்ந்தாள்.

உள்ளே இருந்து வெளியே வந்த ஒருவர், "அம்பிகா யாரம்மா?"—என்று கேட்டார். "நான்தான்" என்றாள் அம்பிகா.

"ஒரு அஞ்சு நிமிஷம் இருங்க. நீங்க பாக்கவேண்டிய ஆளைப் பாக்கலாம்"—என்றார் அவர்.

"நீங்கள் நல்லாயிருக்கணும்" என்று மகிழ்ச்சியோடு சொன்னாள் அம்பிகா.

"எங்கேம்மா நல்லாயிருக்கிறது? நானும் கைதிதான்—நீண்டநாள் கைதி" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனார் அவர்.

அம்பிகாவின் நெஞ்சம் துணுக்குற்றது. கைதி, உத்தியோகம் பார்க்கிறானே! ஒரு வேளை உள்ளே இருக்கும் எல்லா அதிகாரிகளுமே கைதிகள்தானோ? அவள் இருதயத்திலிருந்து அர்த்தமில்லாத ஒரு சிரிப்புப் புறப்பட்டது.

சிறை, கைதிகளைத் திருத்துகிறது; திருத்துவதற்காகத்தான் சிறைக்குள்ளேயே உத்தியோகம் கொடுக்கிறது—என்று எண்ணினாள் அம்பிகா. அவளுக்குத் தெரியாது—சிறை கைதிக்குப் பசியெடுக்க வைக்கிறது. விடுதலையானதும் அவன் உணவு தேட ஆரம்பிக்கிறான். மீண்டும் உள்ளே பிடித்துப் போட்டுப் பசியைத் தொடர்கதையாக்குகிறது சிறைச்சாலை.

"அம்பிகா வாம்மா!"—என்றார் உத்தியோகம் பார்க்கும் கைதி மீண்டும் வந்து. அம்பிகா அவசர அவசரமாக ஓடினாள். சன்னலுக்கு அப்புறம் நிற்கும் பாலனைக் கண்டாள். கண்ணீர் வடித்தாள்; கதறினாள். சுந்தரம் உங்களைப் பார்க்க வந்தாரா?—என்று கேட்டாள். "இல்லை"—என்றான் பாலன்.

"எங்கே தங்குவதாகச் சொன்னார்?"—என்று மீண்டும் கேட்டாள்.

"அதுவும் தெரியவில்லை"—என்றான் பாலன்.

"சரி, எப்படியும் உங்களை விடுதலை செய்ய நான் முயற்சி எடுத்துக்கொள்கிறேன்"-என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள் அம்பிகா. பாலன் அதிகம் பேசவில்லை. போகும்போது அம்பிகாவின் மனம் வக்கீலைப் பார்க்க வேண்டும் — வயதான வக்கீலாக—என்று கூறியது.

சிறைக்குள் திரும்பிய பாலனைப் பார்த்து ஒரு கைதி, "என்ன சாமி, யாரும் வேண்டியவங்க வந்தாங்களா? யாரு சம்சாரமா" என்று கேட்டான்.

பாலனின் இருதயம் வலித்தது. சம்சாரம்! இந்திரா! இந்திரா எப்படி இருப்பாள்! திருமணத்தன்று நடந்தமாதிரி தற்கொலை முயற்சி?—பாலன் அழுதே விட்டான்.

சென்ட்ரல் ஸ்டேஷன் அருகில் வந்தாள் அம்பிகா. இனி ஒரு அடிகூட நடக்கமுடியாது என்கிற நிலைமையில் கையில் பணமில்லை என்பதைப்பற்றியும் சிந்திக்காமல் ஒரு வாடகைக் காரைக் கூப்பிட்டு ஏறி உட்கார்ந்துகொண்டாள். நேரே தன் வீட்டுக்கு வந்தாள். முன்கட்டில் சாய்ந்து கொண்டிருந்த தன் தாயைப் பார்த்தும் பார்க்காதவள் போல வேகமாக உள்ளே சென்றாள். அலமாரியிலேயே சாவி வைக்கப்பட்டிருந்தது. திறந்தாள். ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்களைக் கையிலெடுத்துக்கொண்டாள். அந்தச் சத்தம் கேட்டு ஓடிவந்தாள், ரெங்கலெட்சுமி. அம்பிகாவின் கையிலிருந்த பணத்தைப் பார்த்தாள்.

"அது ஏம் பணம். தொடாதே! கொண்டா இங்கே!"-என்றாள். அம்பிகா அங்கிருந்த பேனாக் கத்தியை எடுத்து கொண்டு, "பேசாதே! பேசினால் கொலை!" என்றாள்.

ரெங்கலெட்சுமி பயந்து பேசாமல் நின்றாள். விடுவிடு என்று வெளியிலே வந்த அம்பிகாவை ஒரு தந்திப்பியூன் எதிர்கொண்டான். கையெழுத்துப் போட்டுவிட்டுத் தந்தியைக் கையில் வாங்கிக் கொண்டாள். காரில் ஏறி உட்கார்ந்தபடி பிரித்துப் பார்த்தாள். பார்த்ததுதான் தாமதம் — முட்டி மோதிக் கொண்டு அழுதாள். சில தினங்களாகவே அவள் தொடர்ந்து அழுதுகொண்டுதானிருந்தாள். ஆனால் இப்பொழுது வந்த கண்ணீர் அவள் அடிவயிற்றிலிருந்து வந்தது. அந்தத் தந்தியிலிருந்தது இது:

"இந்திரா பிழைப்பது அரிது. கடிதம் தொடர்கிறது-சுந்தரம்."

தொடரும்



ஈழநாட்டில் ஏழுநாட்கள்

என்ன காரணத்தாலோ தீவுகளைப் பார்த்ததாலே மனதுக்கு ஒரு உற்சாகம் ஏற்படுகிறது. வேலணைத் தீவுக்காட்சி எனக்கு விவரிக்க முடியாத ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்திற்று. அதிலும் அது யாழ்ப்பாணத்தை யொட்டிய ஒரு தீவாதலின் என் கற்பனை அதிகம் வளர்ந்தது. ஏதாவது ஒரு இடிபாட்டைக் காணுந்தோறும் ராஜ ராஜசோழனுடைய படைகள் இங்கே இறங்கியிருந்திருக்கலாம்; ராஜேந்திர சோழனின் தூதன் இங்கே தங்கியிருந்திருக்கலாம்; சோழநாட்டுப் படைகள் இந்த வழியாக நடந்து போயிருக்கலாம்; பாண்டிய நாட்டு மறவர்கள் இங்கே ஆடிப்பாடி இருந்திருக்கலாம் - என்றெல்லாம் சரித்திர காலத்திற்கு மனது தாவியது.

கடல்கடந்து வேறூர் இடத்துக்கு வந்திருக்கிறோம் என்கிற எண்ணமே இல்லை. தமிழகத்தின் ஒரு பகுதியிலே, அதுவும் வீரத்தின் விளைநிலமான இராமநாதபுரம் மாவட்டத்துக்குள்ளே போய்க் கொண்டிருப்பதுபோலவே தோன்றிற்று. பழ நாட்களில் தென்னகத்திலிருந்து வெளி நாடுகளுக்குப் படையெடுத்துச் சென்ற மன்னவர்கள் நூற்றுக்கணக்கான நாட்டியக் காரிகளையும் கூட்டிக்கொண்டு போவார்களாம். ஒரு அழகான மணற்பரப்பைப் பார்த்தபோது அந்த நாளில் படைகளோடு வந்த ஆட்டக்காரிகள் வெண்ணிலவில் அங்கே ஆடியிருக்கலாம் என்று தோன்றிற்று. தமிழனுகப் பிறந்தவனுக்கு இன்றைக்கிருக்கிற பெருமை இந்தப் பழைய வரலாறுகள் தானே! செழிப்பான வாழ்வு கொண்ட ரஷ்ய மகனைப்போலவோ செல்வம் நிறையப்பெற்ற அமெரிக்கனைப்போலவோ இன்றைய பெருமையைச் சுட்டிக்காட்ட நமக்கு எதுமில்லையே! அதனுல் வழிநெடுக தமிழகத்துச் சரித்திரத்தை இணைத்து இணைத்துப் பேசிக் கொண்டே வந்தேன். நண்பர் ராசதுரை எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்டுக்கொண்டே வந்தார். அவர் மிகவும் அடக்கமானவர். உயர்ந்த பண்புகள் கொண்டவர். பொறுமைக்கடல். திடுதிப்பென்று எதையும் பேசிவிட மாட்டார். அவரைக் கோபப்படுத்திப் பார்க்க வேண்டுமென்கிற ஆசைகூட நான் திரும்பி வரும்வரை நிறைவேறவில்லை.

'சர்க்கார் கல்லூரி' - என்ற கொட்டை எழுத்துக்களோடு கூடிய ஒரு பெரிய மாளிகையின் அருகில் எங்கள் கார் வந்து நின்றது. கல்லூரி முடிந்து மாணவ மாணவிகளெல்லோரும் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். ராசதுரையும் நண்பர் ஆறுமுகமும் இறங்கி கல்லூரிக்குச் சென்று தோழர் சங்காரவேலுவைக் கூட்டிக் கொண்டுவந்தார்கள்.

"நேரே யாழ்ப்பாணத்தில்தான் வந்து இறங்கினீர்களோ?" என்று யாழ்ப்பாணத்தொனியில்கேட்டபடி வரவேற்றுர் தோழர் சங்காரவேலு.

பிறகு எல்லோரும் அவர் தங்கியிருந்த அறைக்குச் சென்றோம். "தேயிலை சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டார். யாழ்ப்பாணத் தமிழர்கள் மறந்துகூட ஒரு ஆங்கில வார்த்தையை உபயோகப்படுத்தி விடமாட்டார்கள். அந்தச் சிறப்பை நினைத்துக்கொண்டே 'கொண்டு வரச்சொல்லுங்கள்' என்றேன். கடற் சங்குகளுக்கும், கிளிஞ்சல் களுக்கும் நடுவில் அந்த விடுதியைக் கட்டியிருந்தார்கள். சுற்றிலும் ஒரே வெண்மணற் பரப்பு.

தோழர் சங்காரவேலுவின் அறையில் ஏராளமான தமிழ் நூல்கள் இருந்தன. ஒன்றை எடுத்துப் புரட்ட ஆரம்பித்தேன். ஒரு சிறுவன் தேயிலை கொண்டுவந்தான். தேயிலையும் சிகரெட்டும்தானே எழுத்தாளனுக்கு உயிர் கொடுப்பவை! அதை வாங்கி ஒருவாய்குடித்தேன். முகம் சுருங்கிற்று, விளக்கெண்ணெய் சாப்பிட்ட மாதிரி. எல்லோரும் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

"இங்கே தேயிலைக்கு உப்புப் போடுவதுண்டோ?" என்று கேட்டேன்.

"இல்லை, இல்லை! தண்ணீரே உப்புத்தான்" என்று விளக்கம் கொடுத்தார்கள்.

உண்மையைச் சொல்லுகிறேன், கடல் தண்ணீரிலேயே அங்கே டீ தயாரிக்கிருர்கள். அவ்வளவு உப்பு! வெகுநேரம் நான் அவதிப்பட்டேன் தேயிலை குடிக்க முடியாமல். ஆனுல், நண்பர் ராசதுரையும் மற்றவர்களும் எவ்வளவு சுவைத்து அந்தத் தேயிலையைக் குடித்தார்கள் தெரியுமா? கடைசியில் நண்பர் சங்காரவேலுவையும் கூட்டிக் கொண்டு எல்லோரும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். அன்று இரவே மட்டக்களப்புக்குப் புறப்பட்டோம். யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் இருநூற்றைம்பது மைல் தூரத்திலிருக்கிறது மட்டக்களப்பு. அந்த வழியில்தான்பொலனருவை போன்ற சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்கள் இருக்கின்றன. இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட்ட நாங்கள், சுமார் ஒரு மணிக்கு கபறனை என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கே இரவு முழுக்கத் திறந்திருக்கிற ஒரு டீக் கடைக்குள் நண்பர்கள் நுழைந்தார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குஇட்லி எத்தகைய உணவோ, அத்தகைய உணவு இலங்கைத் தமிழர்களுக்கு இடியாப்பம். இடியாப்பமும் தேயிலையும் சாப்பிட்டுவிட்டு கொஞ்ச நேரம் உறங்கிவிட்டுச் செல்லலாம் என்பதற்காக ஒய்வு விடுதியைத் தேடினேம். ஒரு விடுதியிலும் இடமில்லை. பிறகு தொடர்ந்து பயணம் செய்து பொலனருவைக்கு வந்து சேர்ந்தோம். இரண்டு லட்ச ரூபாய் செலவில் அங்கே ஒரு விடுதி கட்டியிருக்கிருர்கள். பிரிட்டிஷ் மகாராணி இரண்டு மணி நேரம் தங்குவதற்காகக் கட்டப்பட்டதாம் அது! அங்கேயும் இடமில்லை என்று கண்டு டிரைவர் சின்னத்தம்பி காட்டுக்குள்ளே காரை ஓட்டினார். அங்கு ஒரு சிறிய வீடு. மினுக் மினுக் என்று ஒரு அரிக்கன்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அந்த வீட்டுக்காரர்கள் நண்பர்களுக்கு வேண்டியவர்கள். அந்த இரவில் அவர்கள் தூக்கத்தைக் கெடுத்து நாங்கள் தூங்குவதற்கு இடம் பிடித்துக்கொண்டோம். அடாடா, அந்த வீட்டுக்காரர்கள் எவ்வளவு அன்பாக இருந்தார்கள் தெரியுமா? அங்கேஅன்பு, இருதயத்தின் அடித்தளத்திலே இருந்து வருகிறது. நன்றாக அந்த வீட்டில் படுத்துத் தூங்கிவிட்டு காலை ஆறுமணிக்குப் புறப்பட்டுப் பத்து மணிக்கெல்லாம் மட்டக்களப்பு வந்து சேர்ந்தோம். மட்டக்களப்புக்கு வந்த பிறகுதான் நாம் வந்த வழியிலே என்னென்ன காட்சிகள் உண்டென்று நண்பர்களை விசாரித்தேன். காரணம் காரிலும் நான் நன்றாகத் தூங்கி விட்டேன். அந்த வழியில்தான் சீதை சிறையிருந்த குன்று இருக்கிறதாம். அதைக் கேட்டதும் 'அடாடா, பார்க்காமல் போய்விட்டோமே'

கண்ணதாசன்

என்று வருத்தம் வந்தது. சீதையைப் பற்றியும், திரௌபதியைப் பற்றியும் கேள்விப்படும்போதெல்லாம் குறைந்தபட்சம் அவர்கள் இருந்த இடத்தையாவது பார்க்க வேண்டும்போல் தோன்றும். காரணம் 'செக்ஸ் அப்பீல்' கதா பாத்திரங்களே அவர்கள்தான்.

மட்டக்களப்பில் தோழர் ராசதுரை அவர்களின் வீட்டிலேயே தங்குதவற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவரது அடக்கத்தையும் அமைதியையும் அந்த வீடும் பிரதிபலித்தது. அண்ணா, நெடுஞ்செழியன், பாரதிதாசன், ஸ்டாலின், லெனின் முதலியோரது படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன. அவர் ஒரு பெரிய புத்தகசாலை வைத்திருக்கிருர். பெரும்பான்மையான தமிழ் இலக்கிய நூற்கள் அதில் இருக்கின்றன.

ராசதுரைக்கு ஒரு குழந்தை இருக்கிருள். மூன்று வயதாகிறது. கௌரி என்று பெயர். அங்கே நான் கேட்ட சங்கீதமெல்லாம் கௌரியின் மழலைதான். சென்று இறங்கிய சிறிது நேரத்திற்கெல்லாம் நண்பர்கள் ஒவ்வொருவராக வந்தார்கள். அவர்களது அன்பு இதயங்களை வர்ணிப்பதென்றால் ஆயுள்முழுக்க வர்ணிக்கலாம். களங்கமற்ற இனிய சுபாவம்கொண்டவர்கள் மட்டக்களப்பு நண்பர்கள்.

—தொடரும்—

குஸ்தி பயில்வான்கள்

★

ட்ரம்லான்ரிக் பிரபு குஸ்தியில் மிகுந்த பிரியம் உள்ளவர். அவருடைய மாளிகையின் பக்கமாக வசித்துவந்த ஒரு குடியானவன் குஸ்தியில் மகா தீரன் என்று கேள்விப்பட்டிருந்தார். ஒருநாள் பிரபு, தம் குதிரைமீது ஏறிக்கொண்டு, குடியானவனுடைய வயலின் வேலியைக் கடந்து உள்ளே சென்ருர். அங்கு வேலை செய்துகொண்டிருந்த குடியானவனைப் பார்த்து, "நண்பரே! உங்களைப் பற்றி நான் ரொம்ப ரொம்பக் கேள்விப் பட்டிருக்கிறேன். நம் இருவரில் யார் பலசாலி என்பதைக் கண்டறிவதற்காக இன்று நான் வந்திருக்கிறேன்" என்ருர்.

குடியானவன் பதில் ஒன்றும் பேசாமல் நேராக வந்து. குதிரைமேல் இருந்த பிரபுவின் இடுப்பைப் பிடித்துத் தூக்கி வேலிக்கு வெளியே எறிந்துவிட்டான். பிறகு போய்த் தன் வேலையைக் கவனித்தான். கீழே விழுந்த பிரபு தட்டுத் தடுமாறி எழுந்தார். "வேறு ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டான் குடியானவன்.

பிரபு சொன்னுர்: "ஒரு விசேஷமும் இல்லை. தயவுசெய்து, என் குதிரையையும் வெளியே எறிந்துவிடுவீர்கள் என்று எதிர் பார்க்கிறேன்."

—ஜேம்ஸ் பிரேடி.

எங்கள் வெளியீடுகள்!!
முடிசாய்ந்தது!
ஈ.வே.கி.சம்பத் 1 4 0
மூசோலினி
வி.சிவப்பிரகாசம் 0.10.0
அத்தான்
தென்னரசு 1.0.0
நீலா நிலையம்
சென்னை-6

அகத்தியன் என்பான் யார் ?

1-ம் பக்கத் தொடர்ச்சி

நக்கீரனாருக்கு இலக்கணம் உபதேசித்ததாக திருவிளையாடற் புராணங் கூறுகிறது.

அகத்தியர் பெயரால் வழங்கும் கதைகள்

மேற்கூறியவைகள் அல்லாது, அகத்தியனார் விந்த மலையின் செருக்கை அடக்கியது; வில்லவன், வாதாவி என்னும் அரக்கர்களை உண்டது; காவிரியாற்றைத் தனது கமண்டலத்துள் அடக்கி வைத்திருந்தது; கடலைக் குடித்தது போன்ற பல 'திருவிளையாடல்கள்' செய்தார் என்றும் பல கட்டுக்கதைகள் தமிழ் நாட்டில் இருந்துவருகின்றன. இவை எல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை' அகத்தியனார் பிறந்த வரலாறே நகைப்புக்குரியதாகும்.

தமிழ் மக்களின் கடமை

இதுகாறும் கூறியவற்றையெல்லாம் நன்கு ஆராயின் அகத்தியனார் தலைச்சங்கம் தோன்றிய காலத்திலிருந்து கடைச்சங்கம் அழிந்த காலம் வரை இருந்ததாகத் தெரிகிறது. அப்படியானால், தலைச் சங்கத் திருந்த புலவர்களும், மன்னர்களும், சங்கமும் அழிந்தும் கூட வாழ்ந்தாரா? பின், கடற் பெருவெள்ளம் ஏற்பட்ட காலத்திலும் தப்பித்து விட்டாரா? பின், இடைச்சங்கம் ஏற்பட்ட காலத்திலும் இருந்து, தொல்காப்பியர் போன்ற பன்னிரு இயற்றமிழ் மாணவர்களைப் பெற்று, அம் மாணவர்களும், இடைச்சங்கப் புலவர்களும், மன்னர்களும் அழிந்தும் கூட அகத்தியர் வாழ்ந்தாரா? பின் ஏற்பட்ட கடற் பெருவெள்ளத்திலும் தப்பித்துவிட்டாரா? பின்னர் கடைச்சங்கம் இருந்த காலத்தில் சிறப்புற்றிருந்த நக்கீரனாருக்கு இலக்கணம் உபதேசித்ததாகக் கூறப்படுகிறதே, அப்படியாயின் அகத்தியரிடம் நக்கீரனார் இலக்கணம் பாடங் கேட்காததற்கு முன்பு இலக்கணம் தெரியாத புலவராய் இருந்தாரா? இலக்கணம் தெரியாமல் ஒருவர் தமிழ்ச் சங்கத்துப் பெரும்புலவராய் இருக்கமுடியுமா? இத்துணை நெடுங்காலம் ஏறக்குறைய 12000-ஆண்டுகள் ஒருவர் உயிருடன் வாழ முடியுமா? அகத்தியர்தான் தமிழ் வளர்த்ததாகக் கூறப்படுகிறதே, அப்படியாயின் தமிழ் முச்சங்கங்களிலும் வாழ்ந்திருந்த பல பெரும் புலவர்களெல்லாம் தமிழை வளர்க்க வில்லையா? அவர்கள் எல்லாம் தமிழ் நூல்களை இயற்றவில்லையா? மற்றும் அவர் செய்த திருவிளையாடல்கள், இவைகள் எல்லாம் தற்கால அறிவியல் ஆராய்ச்சி அறிவிற்கு ஏற்றுக்கொள்ளும் செய்தியாகுமா? இவற்றிற்கெல்லாம் விடை இறுத்தல் தமிழ்மக்களின் தலையாய கடமையாகும்.

அகத்தியர் பற்றி அறிஞர் கருத்துக்கள்

அகத்தியரால்தான் தமிழ்மொழி உண்டாக்கப்பட்டது என்று கூறும் அறிஞர்கள்: "தமிழ்மொழி அகத்தியரால் உண்டாக்கப்பட்டது என்று சிலர் சொல்லுவர். அது பிழை. தமிழ்நாட்டில் தமிழ்மொழியானது நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே வழங்கி வந்தது. அகத்தியர் அதற்கு இலக்கணம் அமைத்து வளப்படுத்தினர். வளர்த்தவரையும் தந்தையென்று சொல்லுவது வழக்கம். அதன்படி அகத்தியரைத் தமிழ் தந்தவர் என்று சொல்வது ஓர் உபசார வழக்கு"(நினைவு மஞ்சரி. பகுதி-2.) என்று தமிழ்ப் பெரியார் டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்கள் கூறியுள்ளதையும், "என்றுமுள தென் றமிழ் இயம்பி இசைகொண்டான்" என்று கம்பர் அகத்தியரைப் பற்றிக் கூறியுள்ளதையும், மதுரையிலிருந்து வெளிவரும் 'தமிழ்நாடு' என்னும் நாளிதழில் சென்ற 29-11-54 தேதியில் "அகத்தியன் தமிழனா?" என்ற தலைப்புள்ள கட்டுரையின் முடிவில் "தமிழர் குலம் வாழவேண்டுமானல் குறுகிய மனப்பான்மையுடன் நம் தமிழை ஒதுக்கித் தள்ளக் கருதுகிறவர்கள் எல்லோரையும் ஒதுக்கி, உலக மக்கள் அனைவரையும் நம் குலமெனக் கருதித் தமிழ்மொழி கற்றோரையெல்லாம் தமிழர்களாகவே கருதினுல் நம் மொழியும், நாடும் விரியும். இல்லையானல் நம் தமிழ்நாடு இன்று குறுகிக்கொண்டே போவதுபோல் குறுகிவிடும் என்பதை உணரவேண்டும். தமிழர்கள் பண்பாட்டை ஏற்றுக்கொள்பவர்கள் எல்லோரும் தமிழ்மக்கள் என்று கொள்ளுவதே அறிஞர்கள் கொள்ளும் முடிவாகும்" என்று 'மாசி' அவர்கள் அகத்தியரைப் பற்றிய உண்மைகளை நன்கு விளக்கிக் கூறுமல் பொதுப்படையாகக் கூறியுள்ளதையும்; "தென்றல்" 19-11-55 தேதி இதழில் ஒரு வினவிற்கு விடையளிக்கும் பொழுது பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள் "அகத்தியர் என்ற ஒருவர் இருந்தார் என்பதற்கோ, அவர் தமிழ் இலக்கணம் செய்தார் என்பதற்கோ ஆராய்ச்சியாளரால் உறுதியான சான்று கிட்டவில்லை. புராணக்கதை, முற்றிலும் புராணக் கதையே என்று கூறலாம்.' என்று அகத்தியரைப்பற்றிக் கூறியுள்ளதையும் நாம் நன்கு ஆராய்ந்து அறிதல் வேண்டும்.

ஆகவே, நாமும், முன்பு ஒரு காலத்தில் அகத்தியர் என்ற ஒருவர் தமிழ்நாட்டில் புலவராய் இருந்து தமிழ்மொழி வளர்ச்சிக் காகச் சிறிது பாடுபட்டார் எனக் கோடல் சிறப்புடைத்தாகுமேயன்றி, அவரைப் பற்றிய கதைகளை நம்பிக் கொண்டு 'அரியவர்' என்று கொண்டாடல் அறிவுக்கொவ்வாததாகும்.

வாங்கிவிட்டீர்களா?

"பெருநாள் மலர்"

மலேயா நாட்டில் வாழும் தமிழர்களின் திருநாளாகிய பெருநாள் விழாவின் சிறப்பு மலர். கண்ணைக்கவரும் வண்ணப் படங்கள், கருத்திற்கினிய கவிதை, கட்டுரை, கதை ஏராளம்! மலேயா, இந்தியா, பர்மா, இலங்கை, இந்தோனேஷியா, சைகோன் முதலிய நாடுகளின் தலைசிறந்த எழுத்தாளர்களின் கருத்தோவியங்கள்! சகல நாடுகளிலும் தை மீ முதல் வாரத்தில் விற்பனைக்கு வருகிறது!

மலரினுள்: மலேயாத்தமிழர்களின் தலைவர் திரு. கோ. சாரங்கபாணி, ரங்கூன் மகமட் காசிம், மைடான் மரு. இராசேந்திரன், சைகோன் கமலநாதன், கண்டி வீ. குமாரசாமி, தமிழ் நாட்டின் எழுத்தாளர்களான: அறிஞர் அண்ணாத்துரை, இரா. நெடுஞ்செழியன், கி. வா. ஜகந்நாதன், எம். கே. சண்முகம், ம. பெ. தூரன், இராதாமணாளன், கண்ணதாசன், கா. மு. ஷெரீப், எஸ். எஸ். தென்னரசு, பாரதிதாசன், என் எஸ். கிருஷ்ணன், சகஸ்ரநாமம், ப. நீலகண்டன், எஸ். பாலசந்தர், எஸ். முத்துச்செழியன், எஸ். மாரிமுத்து, டி. என். சிவதாணு, கே. ஏ. தங்கவேலு, தி. ரா. சீனிவாசன், கே. சங்கர், ஆர். நாகேந்திர ராவ், ஆர். எஸ். மனோகர், முதலியோரின் கருத்தோவியங்களும், புகைப்படங்களும் இடம் பெறுகின்றன. வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் உண்டு. உடனே மேற்கண்ட முகவரிக்கு விண்ணப்பியுங்கள்:

மானேஜர்,
"பெருநாள் மலர்" (டெ 761)
10-ஏ. அஸ்ஸாம் கும்பாங் ரோடு,
தைப்பிங். (மலேயா)

இந்தியா விலை ரூ 1.
மலேயா 65 காசு.

★

விளையாட்டுப் போட்டி நிதி

தபால் தந்தி அலுவலகர்கள் சங்கத்தின் சார்பாக நடத்தப்படும் விளையாட்டுப் போட்டி நிதிக்காக 11-12-55 அன்று காலை பாரகன் தியேட்டரில் "இல்லற ஜோதி" திரைப்படம் காட்டப்பட்டது. அவ் வமயம் ஆசிரியர் கண்ணதாசனும், நடிகர். கே. ஏ. தங்கவேலுவும் வந்திருந்து மேற்படி சங்கத்தைப் பாராட்டிப் பேசினர். திரு. சி. ஜே. கிளெமண்ட் நன்றி கூறினர்.

இலங்கைக் காட்சி

பிறப்பு

ஆமதாபாத் தோழர் டி. முத்துக் கிருட்டினன் அவர்கள் துணைவியார் ரங்கநாயகி அம்மையாருக்கு 30-11-55 அன்று ஓர் மகவு பிறந்தது. குழந்தைக்கு 8-12-55 அன்று "அன்பழகன்" எனப் பெயரிடப்பட்டது. அதன் நினைவாக, தென்றல் வளர்ச்சிக்கு ரூ 1. அளிக்கப்பட்டது.

சென்னை 17வது வட்டத் தோழர் ஏ. முனுசாமி அவர்களின் குழந்தைக்கு 3-12-55ம் தேதி யன்று 'கருணாநிதி' என்று பெயர் சூட்டப் பெற்றது. அதன் நினைவாக தென்றல் வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

திருப்புத்தூர் (வ. ஆ.) நகர தி. மு. கழக உறுப்பினர் ஏ. கண்ணன் அவர்களின் துணைவியார் லட்சுமி அம்மையாருக்கு 4-12-55 ஞாயிறு பெண் குழந்தை பிறந்துள்ளது. இதன் நினைவாக தென்றல் வளர்ச்சிக்கு ரூ. 1. அனுப்பப்பட்டுள்ளது.

◉

கோவைச் செழியன்

13-12-55ல் எனக்கு வயிற்றில் ஒரு ஆப்ரேஷன் ஆகி கோவை அரசியலார் மத்திய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதால் இது வரை நான் ஒத்துக் கொண்ட கூட்டங்களுக்கு வர இயலாது என்பதோடு, இனி, மேலும் மூன்று மாதங் களுக்கு எந்தக் கூட்டத்திலும் கலந்துகொள்ள இயலாதவனாக உள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அன்பன்,
கோவை செழியன்.

◉

திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம்

16-12-55 வெள்ளி மாலை 6-மணிக்கு சென்னை திரு. வி. க. திடலில் (கான் சான்ஸ் மித் நகர்) மேற்படி மன்ற சார்பில் நடைபெறும் 'அழகிரி நூலகம்' திறப்பு விழாவில் கண்ணதாசன், ஆர். எஸ். பாண்டியன், மற்றும் பலர் பேசுவர்.

இயன்றதைச் செய்து புயல் நிதிக்கு உதவுங்கள்!

தகுதியிலாக் கடவுளர் !

ஒருவன் மற்றவனிடம் பணிகிருன் என்ருல் பல காரணமிருக்கும். பணம் படைத்தவன் என்பதற்காகப் பணியலாம், பலமுள்ளவன் என்றதனுல் பயப்பட்டுப் பணியும் நிலை ஏற்படக்கூடும். அதிகம் தெரிந்தவன் ஆகவே அவன்பால் பிறருக்குப் பணிவு உண்டாக நியாயம் உண்டு: இப்படி முறையே பல இருக்கத்தான் செய்கிறது.

நம்மிடத்தே இல்லாத ஓர் ஆற்றல் பிறரிடம் இருக்கக் கண்ட நாம் அவர்களுக்கு மரியாதை செலுத்துகிரேம். அதுபோல கடவுளைப் பேரறிவு படைத்த மனிதர் வணங்குகின்றனர் என்ருல் என்ன பொருள்? மனித சக்திக்கே மீறிய ஒன்று கடவுளிடம் இருக்கிறதென்ற நம்பிக்கை தானே ?

மாந்தர் முதலில் இயற்கையின் சூழ்நிலையில் எப்படி உயிர் வாழ்வதென்பதை தெரிந்து தெளிந்து பிறகு வாழும் வகையையும், முறையையும் உணர்ந்து, அதன் பின்பு சமுதாய அமைப்பை அறிந்து இன்றுள்ள உலகியல் இலக்கணத்தைக் கண்டிருக்க வேண்டும். இவ்விதம் நாளாவட்டத்தில் வளர்ந்து வரும் மனித சமுதாயம், சீர்குன்ருமல் செழித்தோங்க வேண்டுமாயின் கூடாத செயல் பலவற்றை அகற்றி நல்லனவென்று அறிந்தவைகளையே போற்றி வருகின்றது. எனவே அத்தகைய சீரிய மதிபெற்ற மனிதர் வணங்கும் கடவுள் எத்தன்மைத்தாய் இருக்கவேண்டும்? மனித மேம்பாட்டிற்கும் மேலானதாய் மிளிரவேண்டுமல்லவா? அதுபோதுதானே ஆறறிவு அடங்கிய மனிதரின் வணக்கத்தை ஏற்றுக்கொள்ள கடவுளுக்கு அருகதையுண்டு! அதில்லாமல் மனிதருள்ளும் விலங்குகளாய்த் திரியும் சிலர் செய்யும் இழிசெயலனைத்தும் இறைவனுக்கும் உடன்பாடு. அவர்களைப்போன்றே கூத்தியும், குடியும், கொலையும், கொடுமையும் மகேசர்களுக்கும் மகிழ்ச்சிதான் எனப் பகர்ந்தால் பகுத்தறிவு அக்கூற்றையும், அதைக் கதைக்கும் கருத்துக் குருடரையும் புறக்கணிக்குமா, பூசை புரியுமா? நல்லறிவு காறியுமிழ்ந்து நகைக்கத்தான் செய்யும். இவ்வாறே இந்நாட்டில் இன்று வழக்கில் இருக்கும் கடவுளர்களின் கயமைத்தனத்தை, அவர்கள் அவ்விதம் ஆக்கப்பட்டிருக்கும் கண்மூடித்தனத்தைக் கண்டிக்கின்றது தமிழ்நில ஐம்பெருங் காப்பியங்களின் தலையாய நூல் சீவகசிந்தாமணி. அதன் ஆசிரியர் திருத்தக்க தேவர் எனும் தெளிந்த பெரியார் கூறுகிருர் :

"தங்கள் கரங்களிலே கொலையாயுதத்தைத் தாங்கி, தன்னை எதிர்த்தவர்களையெல்லாம் அழித்து வீழ்த்திய கடவுளர்கள் கடைசியில் அழகிய மாலைகள் புரளும் திரட்சி பொருந்திய மங்கையரின் கொங்கைகளிலே மயங்கிக் காமுற்றுத் திளைத்திருக்கின்றனர். ஆகவே அவர்கள் அந்தக் கொங்கைகளிலேயே ஆனந்தமாகப் பொருந்தி இருக்கட்டும். நாம் கவலைப்படவேண்டாம். மனிதரைச் சோர்விலாழ்த்தும் எண்வகைத்தான வெவ்விய வினைகளைப் போக்கிப் புனிதமாவதற்கு வழிசொல்லும் நல்லாசிரியனையல்லாது இந்த நன்மை கெட்ட கடவுளரை என் தலையைத் தாழ்த்திப் பணிவேனே? என்று முழங்கினுர் சங்க காலத்தில் தேவரவர்கள். அவர் விடுத்த அறிவுப் பாடல் இதோ :

"எரிமாலை வேல்நுதியின் இறக்கிக் காமன் அருகணையால்
திருமாலை வெம்முலைமேற் றிணைக்கும் தேவர் திருவுறுக
வருமாலை எண்வினையும் அகற்றி இன்பக் கடலாக்கித்
தருமாலை யல்லதுயான் தலையில் தாழ்ந்து பணிவபோ ?"

என்பதுதான். ஆகவே தலையால் வணங்கத் தகுதியில்லாக் கடவுளைக் காட்டாதே, தானே அருவாகி நிற்கும் தத்துவங் கடந்த கடவுளைக் காட்டு என நாம் ஆஸ்திகத்தை நோக்கிக் கேட்கிரேம். தவறென்ன ?

—நீல. துரைக்கண்ணன்.

யாரால் முடியும் ?

— கண்ணதாசன் —

"இங்குள்ளவருக்குத் துன்பம் என்ருல்--இங்குள்ள மக்கள் வருந்துகிருர்கள் என்ருல், சென்னை மக்களுக்குத்தான் உடல் பதைபதைக்கும். புயலின் கொடுமையால் வாடித் தவிப்போரைக் காணக் காமராசர் விமானம் மூலம் பறந்தாரென்ருல் அவர் நம் இனத்தவர் ; 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்';—சதையாடிற்று. வடநாட்டவருக்கு எதுவும் ஆடவில்லை—நம்மைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. காரணம் அவர்கள் வேறு—நாம் வேறு. 'தென்னுடு கடல் கொள்ளப்பட்டது' என்று செய்தி வந்தால்கூட, 'இமயத்திற்கு வராமல் போனுல் நல்லதே' என்று கருதுவார்களே தவிர, நம்மீது அனுதாபம் பிறக்க அவர்களுக்கு நியாயமில்லை. நம் வீட்டில் இழவு என்ருல் நாம்தான் கண்ணீர் வடிக்கவேண்டுமே ஒழிய பக்கத்து வீட்டுக்காரனுக்கு என்ன வந்தது ? ஆகவே, நாம் வேறு—நம் இனம் வேறு ; வடநாட்டார் வேறு—அவர்கள் இனம் வேறு. காமராசர் விமானம் மூலம் பறந்து பார்த்தார் என்ருல் வேறு யார் பார்க்க இருக்கிருர்கள் ?"

" 'மத்திய சர்க்காரிடமிருந்து பிரிந்து விடு' என்றுகூட நிதியமைச்சரைக் கேட்கவில்லை 'போராடிப் பணத்தைப் பெறுங்கள்' என்று தான் கேட்கிரேம். நேரு ஒன்றரை இலட்சம் ரூபாய் தந்தார் என்கிருர் சுப்பிரமணியம். புயலின் கொடுமையால் தவித்திடும் மக்களுக்கு அது எந்த மூலை ?

"கையிலிருந்த வேட்டியை இழந்தவன் வுதைப் பெறுவதுதான் நியாயம் ; பல கோடி ரூபாய் கிடைத்தால் ஒழிய முழுப் பஞ்சத்தையும் ஒழிக்க முடியாது ; இங்கிருந்து போகின்ற எத்தனையோ வரியில் ஒரு வரியை ஒதுக்கி, அதை, தவித்திடும் மக்களுக்கு அனுப்ப வேண்டும் ; வடநாட்டில் வெள்ளம் வந்தபோது இங்குள்ள மந்திரிகள் எப்படிப் பதைத்தனர், தந்தியடித்தனர்? இன்று நமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையைக் கண்டு ஒரு வடநாட்டான் அனுதாபமாவது அனுப்பினுன் என்று சொல்ல முடியுமா ? பஞ்சாபில் வெள்ளம் வந்தபோது வாரிக்கொடுக்க முடிந்தது—ஆனுல் தென்னுட்டு மக்களுக்கு உதவ எதுவுமில்லை. நாம் துடிக்கிரேம் ; வடநாட்டவன் ஏன் துடிக்கப் போகிருன ? இந்த நிலைக்கு 'ஏக இந்தியா' என்று ஏன் பெயர் ? நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு நாம் சொல்வதெல்லாம், இந்தக் கஷ்டத்தைப் போக்க நம் போனறயாராலும் முடியாது—சென்னை சர்க்காராலும் முடியாது. அதைத் துடைக்கும் சக்தி மத்திய சர்க்காரிடமே உள்ளது. எனவே, நமக்குத் தேவைப்படுகிற பணம் ரூ. 5 கோடிக்குக் குறையாமல், மத்திய சர்க்காரிடமிருந்து வந்தாக வேண்டும்.

"வடநாட்டுக்குப் போகிற வரியை நாங்கள் தரமாட்டோம்—என்று சொல்லும் நிலைமையை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிரேம்.

"பஞ்சாபிற்குத் திறந்த கஜானு—வங்காளத்திற்குத் திறந்த கஜானு—உத்திரப் பிரதேசத்திற்குத் திறந்த கஜானு—சென்னைக்குத் திறக்கப்பட வேண்டும் ; இல்லையென்ருல், சுப்பிரமணியமென்ன—வேறு எவர் வந்தாலும், இந்த நாட்டு மக்களின் சக்தியை அடக்க முடியாது."

[11-12-55 மாலை 6 மணிக்கு, சென்னை-வண்ணை கல்லறை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஆசிரியர் கண்ணதாசன் பேசியதின் ஒரு பகுதி.]



பூவும்....................பிஞ்சும் !

ஆசிரியத் தோழருக்கு..

"அடிகள் முன்னர்
யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி
மனம்கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியும்
குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு
என்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம்
கடியல்வேண்டும்
பொய்தீர் காட்சிப்
புரையோய் போற்றி"

மேலே கண்ட பாடலடங்கிய முடங்கலை, மதுரைக்குச் சென்றுகொண்டிருந்த கோவலனிடம், மாதவியினுடைய தூதன் கௌசிகன் கொடுக்கிறான். முடங்கலைப் பிரித்துப் பார்க்கிறான். அதில் மாதவி, தன்னுடைய காதலைப் பெரிதாக எண்ணாமல் கோவலனைத் தன்னுடைய அடிகளாக நினைத்து, முடங்கலை ஆரம்பித்திருக்கிறாள். தன்னை விட்டுப் பிரிந்துவிட்டானேயென்று சீற்றம் கொள்ளாது முதிர்ச்சியடைந்த பெற்றோர்களை தன்னந்தனியாக விட்டுவிட்டு, இரவு நேரத்தில் நகரைவிட்டு நகர் செல்ல, நான் என்ன குற்றம் புரிந்தேன்? பெருமை கொள்கிறான் கோவலன், முடங்கலைப் படித்து முடித்தவுடன். தன்னுடைய காதலைப் பெரிதாக எண்ணாமல், தன்னுடைய பெற்றோர்களுக்காகப் பரிந்து வரைந்துள்ள மாதவியின் பரந்த குணத்தை பத்தரை மாற்றுத்தங்கமாக நினைத்து, ஆனந்தக்கண்ணீர் விடுகிறான். விலைமகள் வயிற்றில் மாதவி பிறந்திருந்தாலும் அவளுடைய குணம் குன்றின் மேலிட்ட தீபத்தைப்போல் ஒளி வீசுகிறது. அவளுடைய முடங்கலில், தமிழகத்தின் பெண்களுக்குரிய தனிப்பண்பு காணக்கிடக்கிறது. சீதை, சாவித்திரி, நளாயினி போன்றவர்களின் கற்பைப் பற்றி, சரடு விடுகின்ற அதாவது உயர்வாகப் பேசுகின்ற நமது மதிப்பிற்குரிய தோழர்கள் மாதவியைப் பற்றி ஒரு வார்த்தை யாவது சொல்வதில்லை. காரணம், வரலாற்றினை வரைகின்றவர்கள் ஒரு சிலரின் கைக்குள் அடங்கிவிடுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். தங்களைப் போன்றவர்கள், தமிழக வரலாற்று ஏடுகளிலே, படிந்து கிடக்கும் இத்தகையவர்களின் வாழ்க்கை வரலாறுகளிலே காணப்படும் வீர நிகழ்ச்சிகளை "தென்றலில்" பிரசுரிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

சி. கே. நடராசன், கோவை.

◎

அன்புள்ள ஐயா,

வணக்கம். இன்று 'புண்ணிய பாரத' நாடெங்கும் தலைவர்களின் அரவணைப்பில் கொழுத்து வரும் இந்தி பற்றி அனைவரும் அறிந்திருப்பர். எப்படியும் இந்தியை, இந்த நாட்டு மக்கள்பால் திணித்தாகவேண்டும் என்று கட்டாயப்படுத்தும் முறையான், மத்திய அரசினரால் பற்பல துறைகளில் இந்திமொழிக்கு முக்கிய இருக்கை தரப்படுகிறது. பள்ளிகளில், இந்திக்கு, முக்கிய இடந்தேடும் பொருட்டு, (தமிழை விடுத்து) இந்தியைக் கற்றுத் தந்து, வளர்க்கும் பள்ளிகட்கும், கல்லூரிகட்கும் மிகுந்த பொருளுதவி அளிக்கப்படுகிறது, மத்திய அரசினரால். இந்தப் 'பொருளுதவி' என்னும் இந்தி வெறியர்களின் 'கண்ணி'யில் அகப்பட்டு தமிழை விடுத்து, இந்தியைப் போதிக்கும் கல்லூரியும் உண்டு! வெட்கம்! வெட்கம்!! தமிழ்நாட்டில், இத்தகையோர் இருப்பதைவிட அழிவதேமேல்!

இந்தித் தேர்ச்சி பெற்ற அரசியல் அலுவலர்கட்கு மிகுந்த ஊதியம்-தமிழ் படித்தறிந்த அரசியல் அலுவலர்கட்குத் தரப்படும் ஊதியத்தைக் காட்டிலும் அதிக ஊதியம்-அளிக்கப்படுகிறது. உதாரணமாய் ஆசிரியர்களிடையே இவ்வித வேறுபாடுகள் உண்டென்பது அனைவர்க்குந் தெரியும். இந்த ஊதியத்தைக் கருத்திற் கொண்டாவது 'விபீடணர்கள்' கூட்டம் அதிகரித்து இந்தியை ஏற்காதா?-என்ற நப்பாசையில் முனைகிறது மத்திய அரசு! இத்தகைய சூழ்நிலைகளை உண்டாக்கி, வளர்த்து, பிராந்திய மொழிகளின் அழிவின் மேல், இந்தியை வாழ்விக்க முனைகிறார்கள், வெறியர்கள்! கொடுமை! கொடுமை!

இந்தியை வளர்க்கப் பல கழகங்கள் நிறுவி, அதற்கெனப் பெருநிதியை விரயம் செய்கின்றனர், அரசினர். சொல் வளமற்ற ஒரு மொழி - இலக்கிய வளமற்ற ஒரு மொழி-'தேசிய' என்ற சொல்லுக்கு நேரு போன்றோர் இந்திப் பதம் தேடித் தடுமாறும் அளவுக்கு 'வளப்பம்' உடைய ஒரு மொழி-மக்களிடையே இன்று மகத்தான முறையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது! விளம்பரத்துக்கு எத்துணை ஏழை, எளியோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிப் பணம் விரயம் செய்யப்பட்டிருக்கிறது!

மக்கட் சபையில் இந்தியில் கூட்டத்தை நடத்துகையில், இந்தியில் நடத்தியதைத் தெரிந்துகொள்ள இயலாது, தாய்மொழியில் பெயர்த்துக் கூறுமாறு கேட்ட உறுப்பினர்க்கு மறுத்து, இந்தி படித்துக் கொள்ளவேண்டும் என இறுமாப்புடன் விடை பகர்ந்தது, இந்தி வெறியர்களின் மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

இரயில்வே நிலையத்தில் பலபெயர்களை இந்தியில் மாற்றிப் பொறித்துள்ளனர். புது நாணயத்திலும் இந்திச் சொல்லைப் புகுத்த விருக்கிறார்கள். எப்படியும் இந்தியினைத் திணித்து விடவேண்டும் என்ற என்ற எண்ணம், அவர்களிடையே, தலைதூக்கி நிற்பதை, இதுபோன்ற பல வழிகளில் கண்டுணரலாம்.

இந்த இந்தி வெறியர்களின் கண்ணில் படத் தவறியது, தமிழகத்தில் ஒன்று உண்டு. அதுதான், தமிழரின் தாய்மொழி அன்பு. கவிஞர் பாரதிதாசனாரின் உள்ளத்தை வடித்து நிற்கும் தமிழ்ப் பாசம்! வந்திருந்த இரசியத் தலைவர்கட்கு, வரவேற்புரை, இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் தான் வாசித்தளிக்க வேண்டுமென்ற, மத்திய அரசினைக் கையில் பற்றியிருக்கும் இந்தி வெறியர்களின் கட்டளை இங்கு பொடியாக்கப்பட்டுளது ஆம்! தீந்தமிழ் மறவர் கூட்டம், சென்னையிலும், கோவையிலும் தமிழில் தான் வரவேற்புரை வாசித்தளித்தது! இந்தி வெறியர்களின் ஆணை எங்கே? தமிழருள்ளத்தில், எதிர்ப்படும் தடைகளை, நொடிப்பொழுதில் பொடியாக்கும் வன்மை மிக்கோங்கிய 'மொழிப்பற்று' என்னும் பெரு வெள்ளம் - இந்தி வெறியர்களின் திட்டத்தைத் தூளாக்கியது.

அ. பண்பு, குமாரபாளையம்

'அந்தச் சிலை'

[ஓர் கடிதம்]

சிகாகோவிலுள்ள இயற்கை வரலாற்றுப் பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிற வெண்கலச் சிலையில் தமிழர்களைப்பற்றித் தவறான கருத்துக் கொண்ட ஒரு விளக்கம் இருந்தது குறித்து 29-10-55ம் தேதிய 'தென்றல்' இதழில் தலையங்கம் தீட்டப்பட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அதுபற்றி **மேலக்குமாரமங்கலம் ஊராண்மைக் கழகத் தலைவர் தோழர் வி. கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. ஆனர்ஸ்** அவர்கள், சென்னையிலுள்ள அமெரிக்க அலுவலருக்கு எழுதிய கடிதத்திற்கு அந்த அதிகாரி எழுதிய பதில் கடிதத்தைக் கீழே பிரசுரித்துள்ளோம்.

"சிகாகோ இயற்கை வரலாற்றுக் காட்சி சாலையில் தமிழரைப் பற்றிக் கூறும் விளக்கத்தையுடைய வெண்கலச் சிலையின் தலைப்பு 'வெள்ளையர்களும், கருப்பு நிறத்தவர்களாகிய நீக்ரோக்களும் சேர்ந்த இனக்கலப்புச் சமூகமே தமிழர்கள்' என்று கூறவில்லை.

"இதைத் தவிர மற்றவை பத்திரிகைகளில் கூறியபடியே உள்ளன. வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தமிழர்கள் அடைந்துள்ள பெரும் முன்னேற்றங்களை வைத்துப் பார்க்கிறபோது, அவ்விதமாகத் தலைப்புக் கொடுத்திருப்பது துரதிர்ஷ்டவசமானதே. இத்தலைப்பு, வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன் எழுதப்படவில்லை; அறியாமையே இதற்குக் காரணமென்று உறுதியளிக்க நான் விரைகிறேன்.

"தமிழர்களைக் குறித்துத் தவறான கருத்துக் கொண்ட அத்தலைப்பை மாற்றி அதற்குப் பதிலாக சரியான தலைப்புக் கொடுக்கப்படுமென்பதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்."

['அந்தச் சிலை' பற்றிய தவறைத் திருத்திக்கொள்ள அமெரிக்க அரசியல் அலுவலர் முனைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. விரைவில் சரியான தலைப்பைக் கொடுத்து தமிழர்களுக்கு நேர்ந்த இழிவைத் துடைக்கக் கோருகிறோம்.—ஆ-ர்.]

தி. மு. கழக உறுப்பினர் சேர்த்தல்

1. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பழைய உறுப்பினர்களைப் புதுப்பிப்பதற்கும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கும் உரிய காலமாக, 1955 டிசம்பர்-1956 சனவரி ஆகிய இரண்டு திங்கள்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

2. இப்பொழுதுள்ள உறுப்பினர்கள் 1956 சனவரித் திங்கள் 31-ம் நாளுக்குள் தம் உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அதற்குள் புதுப்பித்துக்கொள்ளாவிட்டால், 1956 பிப்ரவரி 1-ம் நாளிலிருந்து தி. மு. கழக உறுப்பினர் தகுதியை அத்தகையோர் இழந்துவிட்டதாகக் கருதப்படுவர். அதற்குப் பிறகு சேர்பவர்களுக்குப் பழைய உறுப்பினர் தகுதி சேர்த்துக் கணக்கிடப்பட மாட்டாது; புதிய உறுப்பினர் என்ற முறையிலேயே நோக்கப்படுவர்.

3. உறுப்பினரைப் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை அந்தந்த மாவட்டக் கழகங்களிலிருந்து அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த கிளைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. கிளைக் கழகம் தோற்றுவிக்கக்கூடிய, ஆனால் இதுவரையில் தோற்றுவிக்காத இடத்தில் (சிற்றூர் அல்லது பேரூர் அல்லது நகரம்) முக்கியமான ஒரு பொறுப்பாளராக இருந்து பக்கத்துக் கிளைக்கழகச் செயலாளர், அல்லது அருகிலுள்ள மாவட்டப் பிரதிநிதி, அல்லது அருகிலுள்ள பொதுக்குழு உறுப்பினர் ஆகிய ஒருவரின் அறிமுகத்தின்பேரில் விண்ணப்பத் தாளை மாவட்டச் செயலாளரிடமிருந்து பெற்று, உறுப்பினர்களைச் சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவிட்டுப் பிறகு கிளைக் கழகம் அமைத்துக்கொள்ளலாம்.

5 கிளைக் கழகம் அமைக்கக் குறைந்தது 25 உறுப்பினர்கள் வேண்டும். கிளைக்கழகம் அமைக்க முடியாத இடத்திலுள்ளவர்கள், பக்கத்திலுள்ள ஏதேனும் ஒரு கிளைக்கழகத்தில் உறுப்பினராகத் தம்மை இணைத்துக்கொள்ளலாம்.

6. கிளைக்கழகச் செயலாளரும், கிளைக் கழகம் இல்லாத ஆனால் அமைக்கக்கூடிய இடத்தில் முக்கிய பொறுப்பாளருந்தான் உறுப்பினர்களைப் பதிவு செய்யவேண்டும்.

7. ஒவ்வொரு விண்ணப்பத் தாளிலும் இருபத்தைந்து உறுப்பினர்களைப் பதிவு செய்யலாம். ஒவ்வொரு கிளைக்கழகமும் எவ்வளவு உறுப்பினரைத் தம் ஊரில் சேர்க்கமுடியும் என்று எண்ணுகிறதோ அவ்வளவு உறுப்பினருக்குத் தேவையான பதிவுத் தாள்களை மாவட்டக்கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8. ஒவ்வொரு உறுப்பினரும் உறுப்பினர் கட்டணமாக அணா 8 செலுத்த வேண்டும்: ஒவ்வொரு உறுப்பினரும் செலுத்தும் எட்டு அணாவில் நான்கு அணாவைக் கிளைக்கழகம் வைத்துக்கொண்டு மீதி நான்கு அணாவை நேரே தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும். மாவட்டக் கிளைக்குச் சேரவேண்டிய தொகையைத் தலைமைக் கழகம் பிறகு கணக்குப் பார்த்து அந்தந்த மாவட்டக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கும்.

9. உறுப்பினர் பதிவுசெய்யப்பட்ட விண்ணப்பத் தாளையும், தலைமைக் கழகத்திற்குச் சேரவேண்டிய தொகையையும் (பாதிக் கட்டணத் தொகை) பொதுச்செயலாளர், தி. மு. கழகம், அறிவகம், இராயபுரம், சென்னை-13 என்ற முகவரிக்கு கிளைக்கழகச் செலவில் அப்படியே அனுப்பிவைக்க வேண்டும்.

10. விண்ணப்பத் தாளும், கட்டணத் தொகையும் வந்து சேர்ந்தவுடன் உறுப்பினர் உரிமைச் சீட்டுக்கள் தலைமைக் கழகத்தால், கிளைக் கழகத்தின்மூலம் உறுப்பினருக்கு அனுப்பிவைக்கப்பெறும். உறுப்பினர் உரிமைச் சீட்டை உறுப்பினர், சான்றுக்காக என்றென்றும் வைத்துக் காப்பாற்றி வைக்கவேண்டும்.

11. கிளைக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும், மாவட்டக் கழகத்தில் வைத்துக் காப்பாற்றப்பட வேண்டிய சீட்டுக்களும் அவ்வப்போது அனுப்பிவைக்கப்பெறும்.

12. பின்னால் எப்பொழுதாவது கிளைக்கழகத்திலிருந்து மற்றொரு கிளைக் கழகத்திற்குத் தக்க காரணங்களோடு தம்மை மாற்றிக்கொள்ள விரும்புபவர்கள், உறுப்பினராய் இருக்கும் கிளைக் கழகச் செயற்குழுவின் அனுமதிச் சீட்டோடு, தனியே நான்கு அணாவை தலைமைக் கழகத்திற்குச் செலுத்தி மாற்றிக்கொள்ளவேண்டும்.

13. எந்தக் கிளைக் கழகமும் புதிய தேர்தல் நடத்தக்கூடாது. உறுப்பினர் சேர்க்கும் பணி மட்டுந்தான் இப்பொழுது நடைபெற வேண்டும்.

14 பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்-பெண்கள் மட்டுமே தி. மு. கழகத்தில் உறுப்பினராகும் தகுதியடைந்தவராவர். மாணவர்கள் தி. மு. கழகத்தில் உறுப்பினராக வேண்டாம். அவர்கள் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

"அறிவகம்", சென்னை-13
6—12—1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்,
தி. மு. கழகம்.

பன்மொழிப் புலவர். கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி

பதில் தருகிறார்

இ. இளவரசன், ஓரத்தநாடு.

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பவை தொல்காப்பியர் கால முத்தமிழின் நான்கு வகைச் சொற்கள் மட்டுமே என்று கூறியிருக்கிறீர்களே, தொல்காப்பியர் கூறியிருக்கும் வடசொல்லுக்குத் தாங்கள் என்ன விளக்கம் கூறுகிறீர்கள் என்பதை அறிய ஆசைப்படுகிறேன்.

"இயற்சொல் திரிசொல்
திசைச்சொல் வடசொல் என்று
அனைத்தே செய்யுள்
ஈட்டச் சொல்லே"

இது தொல்காப்பிய எச்ச இயலின் முதல் சூத்திரம். தமிழ் மொழியின் இரு வழக்குகளான உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகியவற்றுக்குப் பொது மரபான சொற்களின் இலக்கணம் முன்பே தரப்பட்டது. செய்யுளுக்கு மட்டும் உரிய சொற்களின் தனி இலக்கணமே இங்கே தரப்படுகிறது. ஆகவே, இது சொல்லிலக்கணமல்ல, சொல்வழக்கின் இலக்கணமே. இதை எல்லா உரையாசிரியர்களும் ஒத்துக்கொள்ளுகின்றனர். ஆனால் திசைச்சொல்லையும் வடசொல்லையும் அவர்கள் அயல்மொழிச் சொற்களாகவே கொள்ளுகின்றனர்.

வடசொற்களில் சமஸ்கிருதத்திலிருந்து வந்த சொற்களை உட்படுத்துகின்றனர்.

திசைச்சொற்களில் நான்கு வகையான பொருள் எல்லைகள் கொள்ளப்படுகின்றன.

ஒன்று தமிழகத்துக்குள்ளேயே செந்தமிழ் நிலம் என்ற நடுப்பகுதியைவிட்டு அதைச் சூழ்ந்த பன்னிரு நிலங்களுக்குரிய வழக்குச் சொற்கள் அவை என்பது. இரண்டாவது தமிழகத்துக்கு வெளியேயுள்ள தெலுங்கு, கன்னடம் போன்ற தமிழின அதாவது திராவிட மொழிச் சொற்களே அவை என்பது. மூன்றாவது தமிழின மொழிச்சொற்கள் மட்டுமன்றி சிங்களம், வங்கம், கலிங்கம், சீனம் முதலிய கீழ்திசை அயல்மொழிச் சொற்களும் அவற்றில் சேரும் என்பது. நம் கால இலக்கணப்புலவர் நான்காவதாக போர்ச்சுகீஸ், பிரெஞ்சு, ஆங்கிலம், இந்தி முதலிய நேற்றைய மொழிச் சொற்களையும் திசைச்சொற்களில் சேர்ப்பர்.

இவ்விளக்கங்கள் தொல்காப்பியத்தில் இடம் பெறமாட்டா என்பது தெளிவு. முதல் இரு பொருள்கள் தவிர, ஏனையவற்றுக்குரிய மொழிகள் அக்காலத்துக்குரியன ஆகமாட்டா.

ஆசிரியர் தேவநேயப் பாவாணர் மூன்றாவது நான்காவது பொருள்களை மறுத்து, ஒன்றாவது, இரண்டாவது பொருள்களை மட்டும் கொள்கிறார். அத்துடன் சங்க காலத்திலேயே இன்றைய தமிழகம் முழுவதும் மலையாள நாடு முழுவதும், தெலுங்கு கன்னட நாடுகளின் தென்பகுதிகளும் ஒரே செந்தமிழ் நிலமாக இருந்தன என்பதை அவர் நினைவூட்டுகிறார். உரையாசிரியர்கள் அனைவரும் இதை மறந்தனர் அல்லது மறுத்தனர். ஆகவே அவர் கருத்துப்படி இச்செந்தமிழ் நாட்டுக்கு வெளியிலுள்ள இன்றைய தமிழின மொழிகள் அதாவது அக்கால கொடுந்தமிழ்ச் சொற்களே திசைச்சொற்களாகும்.

பாவாணர் கருத்து கிட்டத்தட்ட முழு உண்மையைக் குறிப்பது. ஆனால் அது கொடுந் தமிழ்நாட்டு வழக்கை மட்டுமன்றி செந்தமிழ் நாட்டு வழக்கையும் உட்படுத்தியதாகவே இருக்கமுடியும். ஏனெனில் செந்தமிழ் நில எல்லையும் கொடுந்தமிழ் நில எல்லையும் காலத்துக்குக் காலம் மாறுபட்டே வந்தன. தொல்காப்பியர் காலச் செந்தமிழ் நிலம் மட்டுமன்றி அதன் தலைமையிடமாகிய கொற்கையையடுத்த தென்பாண்டி நாடே பிற்காலத்தில் கொடுந்தமிழ் நாட்டில் எண்ணப்பட்டது. மதுரை நகரம்கூட கொடுந்தமிழ்ப் பகுதியாக எண்ணப்பட்டதை சிவஞான யோகிகள் எடுத்துக்காட்டிக் கண்டித்திருக்கிறார்.

இயற்சொல் திரிசொல், ஆகிய இரண்டும் போலவே திசைச்சொல்லும் வடசொல்லும் தமிழின் பல வகை வழக்குச் சொற்களே என்பதை இதனால் உய்த்துணரலாம்.

வடசொல்லின் விளக்கம் சென்ற இதழில் தரப்பட்டது.

தொல்காப்பியரின் சொற் பாகுபாடு, வேறு எம்மொழியிலும் காணப்படாத, கருதப்படாத ஒரு அழகிய பாகுபாடு ஆகும். இயற்சொல் என்பது உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் ஒருங்கே பயன்பட்ட எளிய சொற்கள். உலக வழக்கில் பயன்படாமல் இலக்கிய வழக்கிலும் அருகி, பழங்கால இலக்கிய ஏடுகளில் மட்டும் வழங்கப்பட்ட அருஞ்சொற்களே திரிசொற்கள் ஆகும். திசைச்சொல் உலக வழக்கில் மட்டும் உள்ள சொல், வளரும் உயிரிலக்கியத்தில் மக்கள் வழக்கிலிருந்து புதிது புதிதாக மேற்கொள்ளப்பட்டு வரும் சொற்கள் இவை. நூலாராய்ச்சியாளர் ஆராய்ச்சி நூல்களில் பயன்படுத்தி அதன்மூலம் உலக வழக்கிலோ செய்யுள் வழக்கிலோ இடம்பெற்று வந்த சொற்களே வடசொற்கள்,

பொங்கல் மலரில்!

◉

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
கலைஞர் கருணாநிதி
சொற்செல்வர் சம்பத்
என். வி. நடராசன்
சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு
கலைவாணர் என். எஸ். கே.
பன்மொழிப் புலவர்,
கா. அப்பாதுரையார்
எம். ஏ., எல். டி.
டாக்டர் ராசமாணிக்கனார்,
எம். ஏ., எம். ஓ. எல்.
தமிழ்வள்ளல்,
ஞா. தேவநேயப் பாவாணர்,
எம். ஏ.
வித்துவான் விசு. திருநாவுக்கரசு
பேராசிரியர் க. அன்பழகன்
எம். ஏ.
அரங்கண்ணல்
தில்லை. வில்லாளன் எம். ஏ.
க. அறிவழகன், எம். ஏ.
ஆசைத்தம்பி
மாறன், எம். ஏ.
முல்லைசத்தி
ஜி. நாகராஜன்
நா. பாண்டுரங்கன் எம். ஏ.
ம. ரா. பூபதி, எம். ஏ.
இராசு. தங்கப்பழம்
ஆர். ஆர். சந்திரன்
க. நாராயணன்
நம்நாடு. மு. சண்முகம்
ச. அய்யாப் பிள்ளை
இளம்பரிதி
இசையமுது
ப. நெடுமாறன்
நாக. சண்முகம்
திராவிடப்பித்தன்
தமிழ்ப்பித்தன்
த. சுந்தரேசன்
பி. ஏ. ஆன
தி. சுந்தரம், பி. காம்
தி. மாணிக்கவாசகம்
கவிஞர், வாணிதாசன்
கவிஞர் சாமி பழனியப்ப
கவிஞர் முடியரசன்
கவிஞர் ரவி
தென்னரசு
கண்ணதாசன்

ஆகியோரின் கருத்தோவி களும் மதுரை தியாகா கல்லூரி தமிழ் மா நக்கீரன் எனப் புனை பெ தோழர் அ. காமாட்சி தும் கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சியும் மலரில் பெறுகின்றன.

மலர் விலை ரூபாய் ஒன்

தென்றல் - பொங்கல் மலர்

ஏஜண்டுத் தோழர்களுக்கு

இந்த ஆண்டு தென்றல் பொங்கல் மலர் சென்ற ஆண்டைக் காட்டிலும் மிகச் சிறந்த முறையில் தயாராகிறது. தலைமுறை தலைமுறையாகப்பேணிக்காக்க வேண்டிய அளவுக்கு சிறந்த கட்டுரைகள் மலரில் இடம் பெறுகின்றன. மலர் சென்ற ஆண்டைப்போலவே புத்தகவடிவில் மூவர்ண அட்டையுடன் வெளிவரும். 25-12-55ந் தேதிக்குள் முன்பணம் அனுப்பிப் பதிவு செய்து கொள்ளாத ஏஜண்டுகளுக்கு கண்டிப்பாக மலர் அனுப்பப்பட மாட்டாது. பதிவு செய்து கொள்ளப்படும் ஏஜண்டுகளுக்கு மட்டுமே மலர் தயாரிக்கப்படும். மலர் விலை ரூபாய் ஒன்று தான். தனி மலர் கோருவோர் ஒன்றேகால் ரூபாய் தபால் பில்லைகள் அனுப்ப வேண்டும். தனி மலருக்குத் தபால் பில்லைகள் அனுப்ப வேண்டிய முகவரி, த. பி. மலர் தென்றல்-சென்னை 6.

◉

சந்தாதாரர்கள் கவனத்திற்கு

சந்தாதாரர்கள் பொங்கல் மலருக்கு ரூ 1-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும். சந்தாக் கணக்கில் மலர் அனுப்ப இயலாது.

வாசகர்களுக்கு

தென்றல் என்றுமே வாசகர்களின் நல்யோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தவறியதில்லை. அதுபோலவே, பொங்கல் மலரின் வனப்புக்கும் சிறப்புக்கும் துணை புரியும் வாசகர்களின் ஆலோசனைகளை இந்த ஆண்டும் தென்றல் ஏற்றுக்கொண்டிருக்கிறது. மலரில் பிரசுரிக்கத்தக்க நல்ல கருத்தடங்கிய புகைப் படங்களும், விகடத் துணுக்குகளும் 25-12-55ம் தேதிவரை ஏற்றுக் கொள்ளப்படும். அனுப்புவோர் உரிய காலத்திற்குள் அனுப்ப வேண்டுகிறோம்.

- நிர்வாகி

வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.